வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 03.07.2021 சனிக்கிழமை | இதழ் : 212 | பக்கங்கள் : 16

# 100 மாணவர்களுக்கு குறைவான பாடசாலைகளை ஆரம்பிக்க திட்டம்

## முன்னதாக ஆசிரியர்களுக்கு தடுப்பூசி என கல்வி அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 03

நூறு மாணவர்களுக்கும் குறைவானோரைக் கொண்டுள்ள பாடசாலைகளை ஜூலை மாதத்துக்குள் திறப்பதற்கான திட்டத்தை செயல்படுத்த எதிர்பார்த்துள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

15

# மேலும் 37 பேர் மரணம்!

## மொத்த உயிரிழப்பு 3,157

கொழும்பு, ஜூலை 03

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மேலும் 37 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

இதையடுத்து நாட்டில் கொரோனா தொற்றால் மரணமடைந்த

15

# 1,737 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜூலை 02

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,737 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்

15

# தாதியர்களின் ஏழு கோரிக்கைகளில் ஐந்துக்கு ஜனாதிபதி உடனடி தீர்வு

## ஏனைய இரு கோரிக்கைகளுக்கும் பட்ஜெட்டில் தீர்வு

கொழும்பு, ஜூலை 03

அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் முன்வைத்த ஏழு கோரிக்கைகளில் ஐந்து கோரிக்கைகளுக்கு உடனடி தீர்வுகளை வழங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார். எஞ்சிய இரண்டு கோரிக்கைகளுக்கும், அடுத்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாகத் தீர்வுகளை வழங்கவும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார்.

அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்துடன் நேற்று பிற்பகல் ஜனாதி

15

# சண்டிலிப்பாய் சுகாதார பிரிவில் நேற்று 39 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஜூலை 03

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பெண்கள் 21 பேர் உட்பட மேலும் 39 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட ஆய்வு கூடத்தில் நேற்று 244 பேருக்கு மேற்கொள்

15

# கடல்சார் பொருளாதார அபிவிருத்திக்கு இந்திய அரசு கைகோக்க வேண்டும்

## தூதுவரிடம் அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை



கொழும்பு, ஜூலை 03

கடல்சார் பொருளாதார அபிவிருத்தியில் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் கைகோத்து செயற்பட வேண்டும் என்று தெரவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தின் போது தேவையான அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்

15

# யாழ்ப்பாண மாவட்டத்துக்கு மேலும் 50 ஆயிரம் தடுப்பூசிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 03

யாழ்ப்பாணம் மாவட்ட மக்களுக்காக அடுத்தகட்டமாக, மேலும் 50 ஆயிரம் 'சினோபார்ம்' கொரோனாத் தடுப்பூசிகள் இன்று எடுத்துவரப் படவுள்ளன.

இவை, கொரோனாத்

15

# எல்லை தாண்டும் இந்திய மீனவர்களால் வடக்கு கடற்றொழில் பெரிதும் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 03

மீண்டும் எல்லை தாண்டி வடக்கு கடற்பரப்பில் சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்டுள்ள இந்திய மீனவர்களால் வடக்கு மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டு

15




# ஜி.எஸ்.பி. சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் அரசியல் தீர்வுக்கும் பயன்படுத்தவேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை

வவுனியா, ஜூலை 03

ஜி.எஸ்.பி வரி சலுகையை, பயங்கரவாத சட்டத்தை அகற்ற மாத்திரம் பயன்படுத்தாமல் அரசியல் தீர்விற்கும் ஐரோப்பிய ஒன்றியம் பயன்படுத்த வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் வலியுறுத்தியுள்ளார்.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களினால் முன் னெடுக்கப்படும் போராட்ட பந்தலில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காணாமல் ஆக்கப்

15

## இப்படியும் நடக்கிறது...!

ரயில் வண்டியில் பயணம் செய்து, ரயிலில் இருந்து இறங்கி வந்துகொண்டிருந்த நண்பனைப் பார்த்து, “ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்? உடல் நலம் சரியில் லையா?” என்று கேட்டார் அவரின் நண்பர்.

அதற்கு அவர், “நான் எப்பொழுது ரயிலில் பயணம் செய்தாலும், ரயில் இஞ்சின் பக்கம் பார்த்தபடிதான் அமர்வேன். நன்றாக இருக்கும். இன்று எதிர்பக்கத்தில் அமர்ந்து வந்தேன். அதனால் தலை சற்று சுற்றிக் கொண்டிருக்கின்றது” என்றார் அவர்.

“உனக்கு கஷ்டமாக இருந்திருந்தால் அதனை உனக்கு எதிரில் இருந்தவரிடம் சொல்லி இடத்தை மாறி அமர்ந்து இருக்கலாமே?” என்றார் அவரின் நண்பர்.

அதற்கு அவர் சொன்ன பதில் இது, “நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனால், எதிரில் யாரும் அமர்ந்திருக்கவில்லையே. நான் என்ன செய்வேன்?”

இது உங்களை சற்று சிரிக்க வைப்பதற்காக சொன்ன கதை மட்டுமே.

எப்போதும் நாம் கவலைப்படும்படியாக ஏதேனும் நடக்கும் என்று தெரிந்தால் அதற்கு முன்னர் சிரிக்க வைப்பது நல்லதல்லவா?

அப்படி என்னதான் கவலைக்குரிய விடயம் என்று நீங்கள் கேட்பது சரிதான்.

எரிபொருள் விலை திடீரென்று அதிகரிக்கப்பட்டதால் மண்ணெண்ணெய் பாவிக்கும் அடிமட்ட மக்கள் முதல், ஸ்கூட்டிக்கு பெற்றோல் பயன்படுத்தும் சாமானியர் வரை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். எரிபொருள் விலையேற்றம் என்பது எரிபொருளுடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல, அது எல்லா பொருட்களின் விலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அதனால்தான் அதன் விலையேற்றத்தைக் கண்டித்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நாடு முழு வதிலும் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

நமது மக்களை பொறுத்தவரை அதனை ஒரு பொருட்டாக எடுத்துக்கொண்டதாக தெரியவில்லை. மக்கள் அதனைப் பொருட்டாக எடுத்திருந்தால், நமது மக்கள் பிரதிநிதிகள் அந்த விவகாரத்தை விட்டுவைத்திருக்கமாட்டார்கள். அவர்களுடைய கவனம் எல்லாம் கௌதாரிமுனையில்தானே இருக்கின்றது.

ஆனால், இந்த விலையேற்றத்திற்கு எதிராக அண்மையில் யாழ்ப்பாணத்திலும் ஒரு கண்டன ஊர்வலம் நடத்தப்பட்டது.

ஊர்வலம் சண்டிலிப்பாயில் நடைபெற்றதால் நிச்சயம் அதனை அந்தப் பகுதியில் பிரபல்யமான ஓர் அரசியல்வாதிதானே ஏற்பாடு செய்திருக்கவேண்டும்?

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து சஜித் அணி சைக்கிளில் ஊர்வலம் சென்றது. முன்னர் பல தடவைகள் எரிபொருள் விலையேற்றம் நடக்கின்ற போது மாட்டு வண்டியிலும் சென்று அரசியல் தலைவர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துவர்.

சஜித் அணி சைக்கிளில் எதிர்ப்பு பேரணி நடத்தியதைப் பார்த்துவிட்டு இந்த நமது அரசியல்வாதியும் சைக் கிள் பேரணியை சண்டிலிப்பாயில் நடத்திக் காட்டினார்.

அந்தப் பேரணியில் கடந்த தேர்தலில் தோல்வி அடைந்து அரசியலில் அடுத்து என்னசெய்வது என்று சிந்தித்துக் கொண்டிருக்கின்ற முன்னாள் எம்.பிக்கள் சிலரும் இந்நாள் எம்.பி.யான சித்தார்த்தனும் கலந்துகொண்டனர்.

பாவம் மாவை அண்ணர் கஷ்டப்பட்டு சைக்களில் ஊர்வலம் போனார். அவருடன் சரவணபவன் கூடவே சென்றார். போராட்டத்திற்கு சண்டிலிப்பாய் தெரிவு செய்யப்பட்டதால் அவரே இந்தப் போராட்டத்திற்கு ஏற்பாடும் செய்திருக்கலாம். தாங்கள் அரசியலில் இன்னமும் இருக்கிறோம் என்பதை வெளிக்காட்ட அவர்களுக்கு எரிபொருள் விலையேற்றம் உதவியிருக்கின்றது.

- ஊர்க்குருவி

# சட்டவிரோத அகழ்வுகள் வடக்கு, கிழக்கில் அதிகம்!

கொழும்பு, ஜூலை 03

புதையல் உள்ளிட்ட சட்டவிரோத அகழ்வு சம்பவங்கள் வடக்கு, கிழக்கு மாகாணத்திலேயே அதிகம் பதிவாகியுள்ளன. இது தொடர்பில் நாடு முழுவதும் 37 சம்பவங்களுடன் தொடர்புடைய 158 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

புராதன சொத்துக்கள் மற்றும் பாதுகாப்பு வனங்கள், காட்டுப் பகுதிகளை சேதப்படுத்தும் வகையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் அகழ்வுகள் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இவ்வாறான நபர்களை அடையாளம் கண்டு கைது செய்வதுடன், அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

கடந்த வருடம் மாத்திரம் இத்தகைய அகழ்வுகள் 44 பதிவாகியிருந்தன. இதன்போது 207 பேர் கைதாகியிருந்தனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## தவறணைகளை திறக்க அனுமதி!

யாழ்ப்பாணம், ஜூலை 03

வட மாகாணம் முழுவதும் நேற்று முதல் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி கள்ளு தவறணை திறக்க அனுமதிக் கப்பட்டதாக பனை அபிவிருத்தி சபையின் தலைவர் கிரிசாந்த பத்திராஜா தெரிவித்தார்.

நேற்று பனைஅபிவிருத்தி சபை தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

கொரோனா நிலைமையால் சகல கள்ளு தவறணைகளும் மூடப்பட்டன. இதனால், கள்ளு விநியோகமும் பாதிக்கப்பட்டிருந்தது

இந்த விடயம் தொடர்பில் உடனடியாக மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தின் அனுமதிக்காக விண்ணப்பித்திருந்தோம். ஆனால், இதற்கு சில நிபந்தனைகளுடன் வடக்கில் தவறணைகளை திறப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளார்

தவறணை திறக்க முடியும். ஆனால், அங்கு பொதுமக்கள் அருந்த முடியாது. அத்துடன் அங்கு ஒன்றுகூடி நிற்க முடியாது சுகாதார விதிகளை பின்பற்றி கள்ளு வாங்க முடியும் - என்றார். (ஐ)

## தவிசாளருக்கு கொரோனா; சபை அமர்வு ஒத்திவைப்பு

வலப்பனை, ஜூலை 03

வலப்பனை பிரதேச சபை தவிசாளருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளதால், நேற்றுக் காலை கூடவிருந்த மாதாந்த சபை அமர்வு தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது என வலப்பனை பிரதேச சபை செயலாளர் எஸ்.எச்.மடுகல்ல தெரிவித்தார்.

பிரதேச சபை தவிசாளர் மற்றும் சபையின் செயலாளர் ஆகியோருக்கு நேற்றுமுன் தினம் அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

அதற்கமைய, சபை தவிசாளருக்குத் தொற்று உறுதியாகியுள்ள போதிலும் செயலாளருக்கு தொற்று உறுதிசெய்யப்படவில்லை எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார். (இ)

### கல்வி TV CHANNEL-1 — 03.07.2021 சனிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி TV CHANNEL - 2 — 03.07.2021 சனிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
03.07.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆனி 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# எல்லோரும்போல்தான் அவரும்!

சில தினங்களுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, அவரின் 76ஆவது பிறந்த தினத்தை கொண்டாடியிருந்தார். இதன்போது உருக்கமான ஒரு பதிவு ஒன்றை முகநூலில் பகிர்ந்திருந்தார். அதாவது, "இறக்கும்போது, ஏதாவது இந்த உலகிற்கு செய்திருக்கின்றேன் என்னும் புகழுடன் செல்ல வேண்டும். எனது அரசியல் வாழ்வில் உலகிற்கு நல்லதை செய்யவே முயன்று வந்திருக்கின்றேன்", என்று கூறியிருக்கின்றார். இது பலரின் கவனத்தைப் பெற்றிருந்தது.

பொதுவாக, தமிழில் 'சுடலை ஞானம்' என்று ஒரு கூற்றுண்டு. அதாவது, ஒரு மனிதர் தனது வாழ்நாளில், தன்னால் செய்யக்கூடிய விடயங்களை செய்யாமல் விட்டுவிட்டோமே - என்று கவலைப்படும் நிலையை அல்லது தனது கடந்த காலத்தை எண்ணி கவலைப்படும் நிலையை இந்தக் கூற்று உணர்த்துகின்றது. வாழ்வில் முக்கிய பொறுப்புக்களில் இருக்கும் பலரும் பிற்காலங்களில் இவ்வாறான மனிநிலைக்கு ஆட்படுவதுண்டு.

சந்திரிகா அரசியலுக்குள் காலடி எடுத்து வைத்தபோது, அவருக்கு பெரும் ஆதரவு இருந்தது. விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியராக அறியப்பட்ட அன்ரன் பாலசிங்கம்கூட சந்திரிகாவை 'சமாதானப் புறா' - என்று வர்ணிக்குமளவிற்கு, அவரின் அரசியல் பிரவேசம் அனைவரின் கவனத்தையும் பெற்றிருந்தது. தமிழ் மக்கள் அவரின் வெற்றியைக் கொண்டாடினர்.

யாழ்ப்பாணத்தில் சந்திரிகா சீப்பு, காப்பு என்று விற்கப்படும் அளவிற்கு அவர் தமிழ் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்திருந்தார். ஆனால், யாழ்ப்பாணத்தின்மீது மீளவும் அவர் யுத்தத்தை ஆரம்பித்தபோது, அவரும் பத்தோடு பதின்னொன்றுதான் என்னும் நிலைமை உருவாகியது. "சமாதானம் என்றால் சமாதானம்; போர் என்றால் போர்' என்னும் ஒரு பத்திரகாளி முகத்தை அவரும் காண்பித்தார். இந்த நிலைமையானது, சந்திரிகாவுக்கும், முன்னைய சிங்கள ஆட்சியாளர்களுக்கும் இடையில் பெரிய வேறுபாடுகளைக் காணமுடியாத நிலைமையை உருவாக்கியது.

பொதுவாகவே யுத்தம் என்றால் அழிவுதான். அந்த யுத்தத்தை எவர் முன்னெடுத்தாலும் அதனால் மக்களுக்கு நிச்சயம் அழிவுதான் கிடைக்கும். அடிப்படையில் யுத்தம் என்பதே ஒரு மனித உரிமை மீறல்தான். இதில் சந்திரிகா மட்டும் எவ்வாறு விதிவிலக்காக இருக்க முடியும்? ஆரம்பத்தில் சந்திரிகா குமாரதுங்க சில முயற்சிகளை எடுத்திருந்தாலும்கூட, அவரால் நிதானமான அரசியலை முன்னெடுக்க முடியவில்லை. அதேவேளை, அவரின் கட்சிக்குள் இருந்த கடும்போக்குவாதிகளின் பிடியிலிருந்து ஓர் எல்லைக்கு மேல் அவரால் விலகிச்செல்ல முடியவில்லை. அடிப்படையில் சந்திரிகா குமாரதுங்க வழமையான சிங்கள அரசியல்வாதிகளிலிருந்து வேறுபட்ட ஒருவர்தான். இதற்கு அவரின் கணவரான விஜய குமாரதுங்கவின் அரசியல் வாழ்வும், சந்திரிகாவின் தாராளவாத சிந்தனைகள் மீதான ஈடுபாடும் ஒரு முக்கிய காரணமாகும்.

சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எந்தவொரு விடயங்களையும் அவர் சாதிக்கவில்லை. எல்லோரையும்போல், சாதாரண ஜனாதிபதியாகவே அவரின் அரசியல் வாழ்வு முடிவுற்றது. இன்று அவரின் கட்சியைக்கூட அவரால் காப்பாற்ற முடியாத ஒருவராகவே, அவர் அரசியலில் தோல்வியுற்றிருக்கின்றார். இந்த நிலையில், இறக்கும்போது "இந்த உலகிற்கு நல்ல விடயங்களை செய்த திருப்தியுடன் செல்ல வேண்டுமென்று", ஓர் உருக்கமான பதிவை இட்டிருக்கின்றார். அவர் அதனை எவ்வாறு செய்யப்போகின்றார். இனவாத சிந்தனைகளால் இறுகிப் போயிருக்கும் தென்னிலங்கையின் அரசியல் கட்டமைப்புக்களில் மாற்றங்களை எதிர்பார்க்க முடியுமா?

# யாழ்ப்பாணத்தில் வாள் வீச்சும் சத்திரசிகிச்சை ஒட்டுறுப்பு நிபுணத்துவமும்!



- அலசுவது **இராஜதந்திரி** -

*இலங்கையில் சகல துறைகளிலும் பிரபலம் மிக்கவர்களை உருவாக்கிய பிரதேசம் என்ற பெருமைக்குரியதாக யாழ்ப்பாணம் விளங்குகின்றது.*

*யாழ்ப்பாணம் மருத்துவபீடத்தின் மகத்துவத்துவத்துக்கு மேலும் சிறப்புச் சேர்ப்பதுபோல அப்பீடத்திலிருந்து மருத்துவராக வெளியேறிய முல்லைத்தீவை பிறப்பிடமாகக் கொண்ட ஒட்டுறுப்பு சத்திர சிகிச்சை நிபுணர் இளஞ்செழியன் பல்லவன் வாள் வெட்டொன்றில் துண்டாடப்பட்ட கரத்தை மீளவும் உடலுடன் இணைத்து வெற்றிகரமாக சத்திர சிகிச்சை மேற்கொண்டுள்ளார்.*

*ஆனால், யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த ஒட்டுறப்பு சத்திர சிகிச்சை மூலம் இரு விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாக இருக்கின்றன. ஒருபுறம் யாழ்ப்பாண மருத்துவபீடத்தில் பயின்று ஒட்டுறுப்பு சத்திர சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்றுள்ள மருத்துவர் இளஞ்செழியன் பல்லவனின் திறமையும் மறுபுறம், யாழ்ப்பாண மக்களை வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுற்ற நாளிலிருந்து அச்சுறுத்தி வரும் வாளேந்திய கும்பல்களின் அட்டகாசங்களுமாக இருக்கின்றன.*

*கோண்டாவில் செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் வாளேந்திய கும்பலின் அட்டகாசத்துக்குள்ளாகி கை துண்டாக்கப்பட்ட நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் கடந்த புதன்கிழமை இரவு சேர்க்கப்பட்டிருந்தார்.*

*துண்டாடப்பட்ட கையுடன் வைத்திய சாலை வந்திருந்த நபரை உடனடியாகவே பூர்வாங்க சிகிச்சைகளுக்கு உட்படுத்தி பின்னர் நேற்றுமுன்தினம் இரவு 10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட ஒட்டுறுப்பு சத்திர சிகிச்சையை அதிகாலை நான்கு மணிவரை மேற்கொண்டு மீளவும் கச்சிதமான முறையில் ஒரு முழுமையான கரமாக உடம்போடு இணைத்துள்ளார்.*

**யாழ். மருத்துவ பீடம்**

*1978ஆம் ஆண்டு 43 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் நாட்டின் ஏனைய மருத்துவ பீடங்களில் பணியாற்றிக்கொண்டிருந்த வட பகுதியைப் பிறப்பிடமாகக்கொண்ட மருத்துவ துறையைச்சேர்ந்த பேராசிரியர்கள், விரவுரையாளர்கள் ஆகியோர் தமக்கிருந்த சலுகைகள் பலவற்றையும் ஒரு பொருட்டாக மதிக்காது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவத் துறையை மேம்படுத்த வேண்டுமென்ற உயரிய நோக்கோடு யாழ்ப்பாணம் வந்து தமது சேவையை வழங்கியிருந்தனர்.*

*ஆனால், அவர்களின் உயரிய சேவை நெடுங்காலம் நீடித்திருக்கவில்லை. எண்பதுகளின் ஆரம்பத்தில் தோற்றம் பெற்ற வடக்கு - கிழக்கு யுத்தம், யாழ்ப்பாண மருத்துவ பீடத்தில் பணியாற்றிய நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவ ஆசான்கள் பலரை புலம் பெயர வைத்திருந்தது. இதுதவிர, யாழ்ப்பாண மருத்துவ பீடத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு மின்சார வசதிகள், மற்றும் ஆய்வுகூட வசதிகள் என்பவை எல்லாம் பலத்த சிரமங்களுக்கு மத்தியிலேயே கிடைத்திருந்தன.*

*அத்துடன், யுத்த கெடுபிடிகளுக்கு மத்தியில் மாணவர்கள் மருத்துவ பீடத்துக்கு மாத்திரமல்ல. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஏனைய துறைகளுக்குக்கூட அச்சம் நிறைந்த சூழ்நிலையிலேயே சென்று வந்திருந்தனர்.*

**முல்லைத்தீவைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர்**

*எனவே, மிகவும் அசாதாரண சூழ்நிலையில் தமது மருத்துவக் கல்வியைப் பயின்று தற்போது இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் சிறப்பான முறையில் யாழ்ப்பாண மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறிய மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றனர்.*

*'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல ஒட்டுறுப்பு சத்திர சிகிச்சை நிபுணர் இளஞ்செழியன் பல்லவன் கடந்த புதன்கிழமை துண்டிக்கப்பட்ட கரம் ஒன்றை மீளவும் உடம்போடு பொருத்தியுள்ளமை யாழ்ப்பாண மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறிய மருத்துவர்களின் திறமையை நல்லமுறையில் வெளிப்படுத்துவதாகவே இருக்கின்றது.*

*ஒட்டுறுப்பு சத்திர சிகிச்சை நிபுணர் இளஞ்செழியன் பல்லவன் வட பகுதியில் யுத்தத்தால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இருந்தபோதிலும் ஒரு திறமைசாலிக்கு எத்தகைய தடங்கல்களும் தடையாக இருக்க மாட்டாது என்பதை நிரூபிப்பதாகவே அவர் மேற்கொண்டுள்ள வெட்டுண்ட கரத்தை மீளவும் உடம்போடு பொருத்தும் சத்திரசிகிச்சை எடுத்தியம்புகின்றது.*

*மறுபுறத்தே உடலுறப்புகளையே துண்டாடுமளவுக்கு வாள்வீச்சு கும்பல்களின் அட்டகாசம் வட பகுதியில் அதிகரித்துள்ளமையை அவதானிக்க முடிவதோடு சட்டம் ஒழுங்குக்கு பொறுப்பாக இருப்போர் இந்த நாசகார சக்திகளை சமூக அமைப்பிலிருந்து துண்டாடும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் இவ்வாள் வெட்டு சம்பவம் எடுத்தியம்புவதாக இருக்கின்றது.*

•

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
குடும்பத்தில் உள்ளோருடன் பேசுவதால் ஒரு பிரச்னை தீரும். புதிய முடிவு ஒன்று எடுப்பீர்கள். மனதில் உற்சாகம் நிலவும். இளமையும் கலகலப்பும் கூடும். புது தொடர்பு ஏற்படும்.

**இடபம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றி நல்ல பெயர் எடுப்பீர்கள். கடன் தொகையை வசூலிப்பீர்கள். பயம் ஒன்று நீங்கும். வெளிவட்டார பழக்கம் விரிவடையும். பயணம் பலன் தரும்.

**மிதுனம்**
மனதுக்கு இனிய செய்தி வரும். வீட்டுத்தேவை நிறைவேறும். சுபச்செலவுகள் ஏற்படும் நாள். தொழிலில் மாற்றம் செய்வீர்கள். பெண்களுக்கு இத்தனை நாள் இருந்த தொல்லை அகலும்.

**கடகம்**
உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். பெரியவர்கள் மீது மரியாதை மேலோங்கும். பணம் வரும். பயணம் பலன் தரும். அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**சிம்மம்**
நேற்றிருந்த பயங்கள் அனைத்தும் காணாமல் போகும். கவனமான பேச்சும், போக்கும் இருந்தால் பிரச்னை வராது. எடுத்த விஷயத்தை முடிக்கப் பலர் உறுதுணையாக இருப்பர்.

**கன்னி**
தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரக்கூடியதாக இருக்கும். வருமானம் திருப்தி தரும். பாராட்டும், புகழும் அதிகரிக்கும். தொழில் வளம் மேலோங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு.

**துலாம்**
கருத்து வேறுபாடு நீங்கிப் பகையை மறப்பீர்கள். அதிகாரிகளின் வார்த்தைக்கு கட்டுப்பட்டு நன்மை அடைவீர்கள். இழந்த பணத்தைத் திரும்பப் பெறும் சூழல் அமையும்.

**விருட்சிகம்**
உடல்நலம் சீராகி மன நிம்மதியளிக்கும். செலவு அதிகரிக்கும். ஆதாயம் அளவாக கிடைக்கும். மன உற்சாகம் அதிகரிக்கும். பணத்தேவைகள் எளிதில் நிறைவேறும். கவலைகள் தீரும்.

**தனுசு**
நேற்றைய பிரச்னைகள் தீரும். குடும்பத்தினரின் ஆதரவு உண்டு. காரணமாக பிரிந்திருந்த கணவன், மனைவி இணைவீர்கள். திருமணத் தடை அகலும். பணியாளர்களின் மனம் மகிழும்.

**மகரம்**
திட்டமிடாத செயல்களில் கூட வெற்றி பெறுவீர்கள். வாகனம் வாங்கும் ஆர்வம் வரும். பாராட்டுக் கிடைக்கும். நண்பர்களுக்கு உதவியாகச் சில விஷயங்களை முடிப்பீர்கள்.

**கும்பம்**
முக்கியமானவர்களை கலந்தாலோசித்துச் செயல்படவும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் அனைத்தும் வசூலாகலாம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்க தாமதமாகும்.

**மீனம்**
ஒவ்வொரு வேலையையும் தவறின்றிச் செய்ய வேண்டும். கணவன் மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். உறவினர்களின் தொடர்பால் உள்ளம் மகிழும். நட்பு வட்டம் விரியும்.

# உச்சிப்புளி கடற்படை தளத்தை சுற்றி ‘ட்ரோன்’ பறப்பதற்கு தடை

## மீறினால் சுட்டு வீழ்த்தப்படும் என எச்சரிக்கை

இராமநாதபுரம், ஜூலை 03

தமிழ்நாட்டின் இராமநாதபுரத்தை அடுத்துள்ள உச்சிப்புளி ஐ.என்.எஸ். பருந்து கடற்படைத் தளத்தை சுற்றி ‘ட்ரோன்’கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மீறிப் பறக்கும் ட்ரோன்கள் சுட்டுத் தகர்க்கப்படும் என இந்தியக் கடற்படை எச்சரித்துள்ளது.

இந்தத் தளத்தை சுற்றி 3 கி.மீ. சுற்றளவுக்குள் ட்ரோன்கள் உள்ளிட்ட எந்த பறக்கும் சாதனங்களும் அனுமதியின்றி வரக் கூடாது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஜம்மு விமானப் படைத் தளத்தில் ஹெலிகொப்டர்களை குறிவைத்து ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கக்கூடும் என பாதுகாப்பு படையின் முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்நிலையில்



உச்சிப்புளி ஐ.என்.எஸ். பருந்து கடற்படை தளத்தை சுற்றி ஆளில்லா விமானம் அல்லது ட்ரோன்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடையை மீறி ட்ரோன்கள் பறந்தால் அவை தகர்க்கப்படும் என கடற்படையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அப்படிப் பறக்கும் சாதனங்கள் தகர்க்கப்படும், அல்லது பறிமுதல் செய்யப்படும் என்றும், இதற்குக் காரணமானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ஜெயலலிதா மரணம் குறித்த அறிக்கை; தமிழக அரசு விளக்கம் அளிக்க உத்தரவு



சென்னை, ஜூலை 03,

மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் மரணம் குறித்து விசாரிக்க அமைக்கப் பட்ட ஓய்வுபெற்ற நீதிபதி ஆறுமுகசாமி ஆணையம், மூன்று மாதங்களில் இறுதி அறிக்கையைத் தாக்கல் செய்யும்படி ஏன் உத்தரவிடக்கூடாது என விளக்கம் அளிக்க, தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் மரணத்தில் மர்மம் உள்ளதாக கூறி, அதுசம்பந்தமாக விசாரணை நடத்த உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையில் ஆணையம் அமைத்து, கடந்த 2017ஆம் ஆண்டு அப்போதைய அ.தி.மு.க. அரசு உத்தரவு பிறப்பித்தது.

இந்நிலையில், ஆணையத்தின் பதவிக்காலம் நீட்டிக்கப் பட்டுவருவதாகவும், இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை எனவும் கூறி, ஆணையத்தை முடிக்க உத்தரவிடக் கோரி, தொண்டன் சுப்பிரமணி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை நேற்று விசாரித்த தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி மற்றும் நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி அடங்கிய அமர்வு, விசாரணையை மூன்று மாதங்களில் முடித்து, இறுதி அறிக்கையை அரசுக்கு தாக்கல் செய்யும்படி ஏன் உத்தரவிடக்கூடாது என்பது குறித்து, ஆறு வாரங்களில் விளக்கமளிக்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டு, விசாரணையை ஆறு வாரங்களுக்கு தள்ளிவைத்தது.

# ராஜாவுக்கு எதிராக கருத்து தெரிவித்த 3 நிர்வாகிகள் பா.ஜ.கவில் இருந்து நீக்கம்

சென்னை, ஜூலை 03

மூத்த பா.ஜ.க. நிர்வாகி எச்.ராஜவுக்கு எதிராக கருத்துத் தெரிவித்த காரைக்குடி தொகுதி நிர்வாகிகள் மூவர் கட்சியை விட்டு நீக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அவர்கள் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி கருத்து தெரிவித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலில் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தொகுதியில் போட்டியிட்டு தோற்றார் ராஜா. இந்நிலையில் பா.ஜ.கவின் காரைக்குடி நகரத் தலைவர் சந்திரன், மாவட்ட தலைமைக்கு கடந்த 21ஆம் திகதி அளித்த விலகல் கடிதத்தில், எச்.ராஜா, தான் செய்த தவறுகளை மறைக்க தோல்விக்கு தங்கள் மீது குற்றம் சாட்டுவதாகக் கூறி இருந்தார். எச்.ராஜா மீது பா.ஜ.க. நகர நிர்வாகிகள் தெரிவித்த குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை நடத்தப்படும் என பா.ஜ.க. மாநிலத் தலைவர் எல். முருகன் கூறியிருந்தார்.

இதையடுத்து, எச்.ராஜா மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து சிவகங்கை மாவட்ட பாஜக நிர்வாகிகளிடம் காரைக்குடியில் வைத்து விசாரணை நடத்தினார் மாநில பா.ஜ.க. அமைப்



புச் செயலாளர் கேசவ விநாயகம். எச்.ராஜா மீது தெரிவித்த குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லை என்றும், நிர்வாகிகள் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி கருத்து தெரிவித்தாகவும் இந்த விசாரணையில் முடிவுக்கு வந்தனர்.

இதையடுத்து, காரைக்குடி மண்டல தலைவர் சந்திரன், சாக்கோட்டை தெற்கு மண்டல் தலைவர் பாலமுருகன், கண்ணங்குடி மண்டல் தலைவர் பிரபு ஆகியோர் பா.ஜ.க. கட்சிப் பொறுப்புகள் மட்டுமில்லாமல், அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்தும் நீக்கப்படுவதாக மாநிலப் பொதுச் செயலாளர் கரு.நாகராஜன் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




# 10 இலட்சம் சினோபாம் தடுப்பூசி நேற்று இலங்கை வந்தடைந்தன

கொழும்பு, ஜூலை 03

சீனாவின் சினோபார்ம் தடுப்பூசியின் 10 இலட்சம் டோஸ் நேற்றுக் காலை இலங்கையை வந்துடைந்தது.

இந்த கையிருப்பில் உயர்கல்விக்கு வெளிநாடுகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கு தடுப்பூசி போட சிறப்புத் திட்டம் தொடங்கப்பட உள்ளது என்று அரசு தெரிவித்துள்ளது.

நாட்டில் 10 இலட்சம் பேர் கோவிட்-19 தடுப்பூசியின் இரண்டு டோஸையும் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நாணய நிதியத்துடன் உடன் பேசுக!

## அரசிடம் கோரிக்கை முன்வைத்தார் ஹர்ஷ டி சில்வா



கொழும்பு, ஜூலை 03

**நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு, சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு ஒன்றை அரசாங்கம் உடனடியாக முன்னெடுக்கவேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தியுள்ளார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாணயத்தாள்களை அச்சிடுவதன் ஊடாக மாத்திரம் நாட்டை அபிவிருத்தி செய்துவிட முடியாது என்பதை அரசாங்கம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டினார்.

நாடு, பெரும் பொருளாதார பின்னடைவை முதன் முறையாக சந்தித்துள்ளது. அதனை கட்டியெழுப்புவதற்கு உடனடி நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். இல்லாவிடின் மக்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இந்த விடயத்தில் உரிய தீர்வொன்றை பெற்றுக்கொள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் அரசாங்கம் பெற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)





# புங்குடுதீவு கடற்கரையில் இறந்து கரையொதுங்கியது கடலாமை!

யாழ்ப்பாணம், ஜூலை 03

புங்குடுதீவு, நடுத்துருத்தி கடற்கரையில் இறந்த நிலையில் கடலாமை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

இந்த கடலாமை இறந்த நிலையில் நேற்று முன்தினம் கரையொதுங்கியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து நேற்றுக் காலை அங்கு சென்ற வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கடலாமையை உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக எடுத்துச் சென்றனர்.

கரையொதுங்கிய குறித்த கடலாமை 38 அங்குலம் நீளமும், 27 அங்குல அகலமும் மற்றும் 76 அங்குலம் சுற்றளவுடையது என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆட்பதிவு திணைக்களத்தின் சேவைகள் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 03

எதிர்வரும் 5ஆம் திகதி முதல் ஆட்பதிவு திணைக்களத்தின் சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட உள்ளன.

இதற்கமைய, தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி முன்பதிவு செய்து கொள்பவர்களுக்கு மாத்திரமே சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக அந்த திணைக்களம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அதன்படி பிரதேச செயலகங்களில் உள்ள அடையாள அட்டைப் பிரிவுக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் முன்பதிவு செய்துகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், ஏற்கனவே பதிவு செய்தவர்களின் அடையாள அட்டைகள் அஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பினை ஏற்படுத்தி முன்பதிவை மேற்கொள்ளலாம்.

பத்திரமுல்லை பிரதான அலுவலகம் - 011 522 61126 / 011 522 6100

தென் மாகாண அலுவலகம் - 091 222 8348

வடமேல் மாகாண அலுவலகம் - 037 555 4337

வடமாகாண அலுவலகம் - 024 222 7220

கிழக்கு மாகாண அலுவலகம் - 065 222 9449. (அ)

# மாணவர் உரிமை மறுக்கப்படுவதாக அரசுக்கு எதிராக முறைப்பாடு பதிவு

மட்டக்களப்பு, ஜூலை 03

மாணவர்களின் உரிமைகள் மறுக்கப்படுவதாக அரசுக்கு எதிராக இலங்கை ஆசிரியர் சங்கம் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை, மட்டக்களப்பு-இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில், இலங்கை ஆசிரியர் சங்கம் இந்த முறைப்பாட்டை பதிவு செய்துள்ளது.

இந்த முறைப்பாட்டில் இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளதாவது:-

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சுமார் ஒரு வருடமும் மூன்று மாதங்களாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் மாணவர்களின் கல்வி செயல்பாடுகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்விடயத்துக்கு அரசாங்க எந்தவிதமான நடவடிக்கையோ அல்லது தீர்வையோ வழங்குவதாக தெரியவில்லை. ஆகவேதான் அரசுக்கு எதிராக இத்தகைய முறைப்பாட்டை நாம் பதிவு செய்துள்ளோம்.

கிழக்கு மாகாணத்தில் 1113 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. ஆகையால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இணையத்தின் ஊடாக கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த காலகட்டத்தில், பெரும்பாலான மாணவர்களுக்கு சம வாய்ப்பு இல்லாத காரணத்தால் அவர்களின் கற்றல் செயல்பாடுகளில் இடைவிலகல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மூடப்பட்டிருக்கும் தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகள் வெறும் பலகையை மட்டும் வைத்துக்கொண்டு கற்றல் செயல்பாடுகள் எதுவுமே இல்லாத நிலைமை காணப்படுகின்றது.

தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்துவதில் காட்டும் அக்கறையை ஏன் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் அரசாங்கம் காட்டுவதில்லை.

இதேவேளை, ஆசிரியர்களுக்கும் தடுப்பூசி வழங்கவில்லை. இது முற்றிலும் கண்டிக்கத்தக்கது. சுகாதார அமைச்சின் சுற்றுநிருபம் மீறப்பட்டுள்ளது-என்றுள்ளது.

# அரசியல் கைதிகள் 60 பேரின் விவரம் 225 எம்.பிக்களுக்கும் அனுப்பிவைப்பு

கொழும்பு, ஜூலை 03

சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 60 பேரின் விவரங்கள் அடங்கிய கடிதங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

'குரலற்றவர்களின் குரல்' அமைப்பினால் இந்த கடிதங்கள் நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

யாழ்.பிரதான தபாலகத்திலிருந்து கடிதங்கள் அனுப்பப்பட்டன.

முன்னதாக குரலற்றவர்களின் குரல் அமைப்பினரால் ஊடக சந்திப்பும் நடத்தப்பட்டது.

இதன் போது,

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னை கொல்ல வந்தவருக்கு மன்னிப்பு வழங்குவதாக அறிவித்திருக்கின்றார். அதேபோல முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவும் தன்னை கொல்ல வந்தவருக்கு மன்னிப்பு வழங்கத் தயாராக உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஆனால், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தம்மைக் கொல்ல வந்ததாக சொல்லப்படுகின்றவர்களை மன்னித்து விடுதலை செய்ய ஏன் கோரக்கூடாது என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

# பயண தடையை மீறி பயணித்த பஸ்களை மடக்கினர் பொலிஸார்

## அன்ரிஜென் சோதனையில் மூவருக்கு கொரோனா

மட்டக்களப்பு, ஜூலை 03

மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாட்டை மீறி கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த மூன்று அதி சொகுசு பஸ்களை பொலிஸார் கைது மடக்கிப் பிடித்துள்ளனர்.

செங்கலடி-பதுளை வீதியில் உள்ள இராணுவ சோதனைச் சாவடியில் இருந்த பொலிஸாரினால் இந்த பஸ்கள் சோதனையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு பொலிஸாரினால் பொறுப்பேற்கப்பட்ட குறித்த பஸ்களுக்கு மாகாணங்களுக்கு இடையில் பயணிப்பதற்கான எவ்வித அனுமதிப்பத்திரமும் இல்லை என கண்டறியப்பட்டுள்ளது.

பின்னர் பஸ்ஸில் பயணித்த பயணிகள் அன்ரிஜென் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அதில் மூவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொரோனா நோயாளர்கள் கரடியனாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். கைது செய்யப்பட்ட பஸ் சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# 08 முதல் 10 வாரங்களில் 4ஆவது அலை அபாயம்!

## சுகாதார நிபுணர்கள் நாட்டுக்கு எச்சரிக்கை

**கொழும்பு, ஜூலை 03**

**இலங்கையில் பரவிவரும் டெல்டா வைரஸைக் கட்டுப்படுத்த அவசர நடவக்கை எடுக்கப்படாவிட்டால் 8 முதல் 10 வாரங்களில் தொற்றுநோய் தீவிரமடையும். இது நான்காவது அலைக்கு வழிவகுக்கும் என சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.**

நாட்டில் டெல்டா திரிபு தொற்றுக்குள்ளான நோயாளிகள் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து நிலைமையைக் கண்காணித்து வருவதாக சுகாதார அமைச்சின் மூத்த அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும், மக்கள் சுகாதார வழிகாட்டல்களைக் கடைப்பிடிக்காமல் தற்போதுள்ள நிலை தொடருமானால் இன்னும் 8 முதல் 10 வாரங்களுக்குள் இலங்கை நான்காவது அலையை எதிர்கொள்ள நேரும் சுகாதார வல்லுநர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

இலங்கை எதிர்கொண்ட மூன்று கோவிட்-19 அலைகளும் அல்பா திரிபு வைரஸை கொண்டிருந்தன. ஆனால், டெல்டா திரிபு மிகத் தீவிரமானது. இதனைத் தீவிரமாக எடுத்துக்கொள்ளாவிட்டால் நான்காவது அலையைத் தவிர்க்க முடியாது.

அல்பா திரிபு வைரஸை விட டெல்டா திரிபு 70 வீதம் அதிக சக்தி வாய்ந்தது. மிக வேகமாகப் பரவி ஆபத்துக்களை அதிகரிக்கக்கூடியது.

முதலில் தெமட்டகொடை பகுதியில் டெல்டா திரிபு வைரஸ் கண்டறியப்பட்டதை தொடர்ந்து, வேறு இடங்களிலிருந்தும் அவ்வப்போது இவ்வகை திரிபால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டறியப்பட்டு வருகின்றனர். எங்களால் முடிந்த வரை இந்த வைரஸ் மேலும் பரவாமல் தடுக்க முயற்சி செய்கிறோம். எனினும், மக்களும் சுகாதார வழிகாட்டல்களை தீவிரமாகக் கடைப்பிடித்து ஒத்துழைக்க வேண்டும் என சிரேஷ்ட சுகாதார அதிகாரி ஒருவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, உலகில் சுமார் 96 நாடுகளில் கொரோனா வைரஸின் வேகமாகக் பரவக்கூடிய ஆபத்தான டெல்டா திரிபு பரவியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள உலக சுகாதார அமைப்பு, அடுத்து வரும் மாதங்களில் இது உலகில் பெரும்பாலான நாடுகளில் ஆதிக்கம் செலுத்தும் எனவும் எச்சரித்துள்ளது.

இதுவரை கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் திரிபுகளில் டெல்டா மிக வேகமாகப் பரவும் அபாயத்தைக் கொண்டதாக உள்ளது.

தடுப்பூசி போட்டுக்கொள்ளாத மக்களிடையே இது மிக வேகமாகப் பரவி வருகிறது என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் கெப்ரேயசஸ் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பஸ் சாரதி, நடத்துநரால் யுவதி துஷ்பிரயோகம்

கொழும்பு, ஜூலை 03

திருஆபாணமலை ஹொரவப்பொத்தானை பகுதியில் பொது போக்குவரத் தில் ஈடுபடும் பஸ்ஸில் வைத்து யுவதி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இதனை பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநரால் குறித்த யுவதி இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளாரென தகவல் வெளியாகியுள்ளதாக அவர் கூறினார்.

இதனையடுத்து, ஹொரவ பொத்தானை பொலிஸரால் கைது செய்யப்பட்ட குறித்த இருவரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு 06ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனரென அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளதுடன், பொது மக்களுக்கு சேவை வழங்கும் இவ்வாறான துறைகளை சேர்ந்தவர்கள் அதற்கு முரண்பாடாக செயல்பட்டால் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

(அ)

# தாதியர் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது

கொழும்பு, ஜூலை 03

3 தாதியர் சங்கங்கள் நேற்று முன்தினம் ஆரம்பித்த சுகயீன விடுமுறைப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது.

அரச தாதி அதிகாரிகளின் சங்கம், அகில இலங்கை தாதியர் சங்கம், அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் என்பன இந்தப் போராட்டத்தில் களமிறங்கியுள்ளன.

தாதியர்களின் போராட்டம் காரணமாக வைத்தியசாலைகள் பலவற்றின் நாளாந்த செயல்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்தன.

எனினும், திடீர் மற்றும் அத்தியாவசிய சேவைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல தீர்மானித்துள்ளதாக தாதியர் சங்கங்கள் குறிப்பிட்டுள்ளன.

பதவி உயர்வு மற்றும் தாதிய கொடுப்பனவு உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து இந்த போராட்டம் நடத்தப்பட்டது.

# ஐ.தே.க. மறுசீரமைப்பு நடவடிக்கையை உறுதிப்படுத்த ஐந்து பேர் கொண்ட குழு

கொழும்பு, ஜூலை 03

ஐக்கிய தேசிய கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கையை உறுதிப்படுத்திக்கொண்டு முன்னுக்குக் கொண்டு செல்வதற்கு தேவையான பரிந்துரைகளை சமர்ப்பிக்கக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்ரமசிங்கவினால் 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த குழு உறுப்பினர்களாக பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன, தவிசாளர் வஜிர அபேவர்த்தன, செயலாளர் ரங்கே பண்டார, உபதலைவர் அகில விராஜ் காரியவசம் மற்றும் உபதவிசாளர் சாகல ரத்னாயக்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் புதிய மக்கள் மன்றம் ஒன்றை அமைப்பதற்கான தகவல்களை ஒன்றுதிரட்டுதல், வாக்காளர் தொகுதி மட்டத்தில் குறைந்த பட்சம் 50பேர் கொண்ட குழுவொன்றை அமைத்தல், மாவட்ட முகாமையாளர்களாக நியமிக்க முடியுமான நபர்களை இனம் கண்டு, அவர்கள் தொடர்பில் பரிந்துரைகளை சமர்ப்பித்தல், அனைத்து தேர்தல் தொகுதிகளுக்கும் சட்டச் செயலாளர், இணையத்தள நடவடிக்கைகளுக்கான செயலாளர், பயிற்றுவித்தல் தொடர்பான விடயதான செயலாளர் போன்ற பதவிகளுக்கு பொருத்தமான கட்சி ஆதரவாளர்களை இனம் காண்பது உட்பட பல பொறுப்புக்கள் இந்த குழுவுக்கு சாட்டப்பட்டுள்ளன.

கோவிட் வைரஸ் பரவிச் செல்வதால், தனிமைப்படுத்தல் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு டிஜிற்றல் மற்றும் தகவல்தொழிநுட்பங்களை பயன்படுத்தி இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை இந்த நடவடிக்கைகளின் முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் ரணில் விக்ரமசிங்க குழு உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார்.

# திருமணத்துக்கு மறுப்பு; சிறுமியை வெட்டிவிட்டு இளைஞன் தலைமறைவு

கொழும்பு, ஜூலை 3

திருமணம் முடிக்க மறுப்பு தெரிவித்த 16 வயது சிறுமியொருவரை 26 வயது டைய இளைஞர் ஒருவர் கொடூரமாகத் தாக்கி, சரமாரியாக வெட்டியுள்ளார்.

மாத்தளை மாவட்டத்துக்குட்பட்ட தம்புள்ளை பகுதியிலேயே இக்கொடூரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார். அவரை கைது செய்வதற்கான தேடுதல் வேட்டையில் தம்புள்ளை பொலிஸார் இறங்கியுள்ளனர்.

குறித்த சிறுமி பெற்றோரை இழந்து, பாட்டியின் அரவணைப்பிலேயே வாழ்ந்துவருகின்றார்.

வெட்டுக்காயங்களால் படுகாயமடைந்த நிலையில் தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறுமிக்கு 10 மணிநேரம் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த சிறுமி வசிக்கும் பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றுக்கு வந்திருந்த போது இளைஞர், திருமணம் முடிக்கும் யோசனையை முனவைத்துள்ளார். அதன்பின்னர் தொடர்ச்சியாக தொந்தரவு கொடுத்துள்ளார். அதனை சிறுமி ஏற்க மறுத்ததால் முதலில் தலையில் உள்ள முடியை வெட்டியே பிறகு தாக்கியுள்ளார்.

இது தொடர்பில் தம்புள்ளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# அங்கீகாரமற்ற நிறுவை கருவிகளை பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஜூலை 03

யாழ். மாவட்டத்தில் அரச அங்கீகாரமற்ற நிறுத்தல் கருவிகளை பயன்படுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ் மாவட்ட செயலக அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு அறிவித்துள்ளது.

தற்போதுள்ள கொரோனா இடர் கால சூழ்நிலையில் யாழ். மாவட்ட வியாபாரிகள் வியாபார நடவடிக்கைக்கு பயன்படுத்தும் நிறுத்தல் அளவை கருவிகள் தொடர்ந்தும் மாவட்ட செயலக அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவினரால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்போது சில வியாபாரிகள் அரச அங்கீகாரமற்ற நிறுத்தல் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. அரச அங்கீகாரமற்ற நிறுத்தல் கருவிகளை பயன்படுத்தும் வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எதிர்வரும் நாட்களில் எடுக்கப்படவுள்ளது.

எனவே, அரச அங்கீகாரமற்ற நிறுத்தல் கருவிகளை பயன்படுத்தும் வியாபாரிகள் அதனை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும், அவர்கள் அரச அங்கீகாரமுள்ள நிறுத்தல் கருவிகளை பயன்படுத்த வேண்டும். சட்டத்திற்கு முரணான வகையில் அரச அங்கீகாரமற்ற நிறுத்தல் கருவிகளை



பாவிப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

(ஐ-3)

# கோதுமை மாவின் விலையை அதிகரித்தால் சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 03

கோதுமை மா விலை அதிகரிப்பில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உணவுப் பொருட்களுக்கான அதிகபட்ச விலை நுகர்வோர் விவகார அதிகாரசபையால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், தன்னிச்சையாக விலையை அதிகரிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், விலை அதிகரிப்புக்கு எதிராக நுகர்வோர் விவகார அதிகார சபையினால் எதிர்வரும் நாட்களில் வழக்கு தொடரப்படும் எனவும் அவர் கூறினார்.

# “வன்னி மக்களுக்கும் தடுப்பூசி வழங்குங்கள்!”

மன்னார், ஜூலை 03

கொரோனா தடுப்பூசிகளை பாரபட்சமின்றி வன்னி மக்களுக்கும் ஏற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கேட்டுள்ளார்.

கொரோனா தடுப்பூசிகள் இதுவரை வன்னி மக்களுக்கு ஏற்றப்படாமை தொடர்பாக அவர் நேற்று அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அதில், கொரோனா தொற்று நாட்டில் பரவலாக காணப்படும் நிலையில் தடுப்பூசிகளை வழங்குவதற்கு அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனினும், தற்போது இந்த நடவடிக்கையில் அரசின்ற ஈடுபாடு போதுமானதாக காணப்படாமையினாலேயே பல பகுதிகளிலும் மக்கள் முதலாவது தடுப்பூசியை கூட பெற்றுக்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு சென்றுள்ளனர்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவை உள்ளடக்கிய வன்னி பிரதேசத்தில் இதுவரை எந்த ஒரு பொது மகனுக்கும் தடுப்பூசி வழங்கப்படவில்லை.

ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் சுகாதார பகுதியினருக்கு மாத்திரமே தடுப்பூசி வழங்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய பொது மக்களுக்கு வழங்க பாரபட்சம் காட்டி வரும் அரசாங்கம் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# பெரமுனவின் ஆட்சி மக்களை கலக்கமடைய வைத்துள்ளது!

## சாடுகின்றது சுதந்திரகட்சி



**கொழும்பு, ஜூலை 03**

**இலங்கை பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் இளைஞர்களும் பொது மக்களும் கலக்கமடைந்துள்ளனரென சிறிலங்கா சுதந்திர கட்சி தெரிவித்துள்ளது.**

தற்போது நாடு ஒரு அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கிறது என்று சுதந்திரக் கட்சியின் துணைத் தலைவரான பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித்துள்ளார்.

நேற்று கண்டியில் ஊடகங்களுடன் பேசிய அவர், செழிப்பு சகாப்தத்தை முன்னெடுப்பதாக உறுதியளித்த அரசாங்கத்தின் நகர்வுகளை பொதுமக்கள் தொடர்ந்து கவனிப்பார்கள்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலின்போது பெரமுன தலைமையிலான கூட்டணியின் கூட்டுக் கட்சிகளை அரசாங்கம் தாக்கத் தொடங்கியுள்ளது.

தேர்தலுக்கு முன்னர் பெரமுன மற்றும் ஜனாதிபதியுடன் சுதந்திரக்கட்சி தனித்தனியாக ஒப்பந்தங்களை எட்டியது.

ஆனால், புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டவுடன் அவை மீறப்பட்டன-என்றார். (அ)

# 5 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு எதிர்பார்த்துள்ளோம்

## அஜித் நிவாட் கப்ரால் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 03

கோவிட் பரவல் காரணமாக இவ்வருட இறுதிக்குள் எதிர்பார்த்த 6 வீத பொருளாதார வளர்ச்சியை அடைவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இருப்பினும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள மீட்சிக்கான செயல்திட்டங்கள் மூலம் 2021ஆம் ஆண்டு முடிவில் 5 - 5.5 சதவீதம் வரையான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு எதிர்பார்ப்பதாக நிதி, மூலதனச்சந்தை மற்றும் அரசதொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக் கொள்வதற்காக நாட்டின் இறையாண்மைக்கும் சுயாதீனத் தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான நிபந்தனைகளுக்கு அடிபணிய முடியாது என்றும் சுட்டிக்காட்டிய அவர், அந்த வரிச்சலுகை நீக்கப்படுவதால் பொருளாதார ரீதியில் பாரியதொரு சேதம் ஏற்படாது என்றும் அதனை எதிர்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இணையவழி கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்-

நாட்டில் போர் இடம்பெற்றுக்கொண்டிருந்த 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும், எரிபொருட்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்படும் காலப் பகுதியிலும் மேலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துவிடும் என்றுதான் கூறப்பட்டது. இது தற்போது புதிதாகக் கூறப்படுகின்ற விடயமல்ல. எமது அரசாங்கம் பதவியேற்றுக் கொண்டதிலிருந்து பல்வேறு தரப்பினராலும் இவ்வாறு கூறப்பட்டு வருகின்றது. நாட்டின் பொருளாதாரத்தில் எவ்வித நெருக்கடிகளும் இல்லை என்று நான் கூறவில்லை. அதில் பிரச்னைகள் இருக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்கின்றேன்.

ஆனால், பொருளாதாரம் வீழ்ச்சியடையப்போவதாக பொருளாதார நிபுணர்கள் உள்ளிட்ட பலராலும் கூறப்படும் விடயங்கள் அரசியல் கோணத்தை மையப்படுத்தியவையாகும். பொருளாதாரத்தில் பிரச்னைகள் காணப்படுவதாகக் கூறுகின்ற எந்தவொரு தரப்பினரும் அதற்கான தீர்வுகளைக்கூற முன்வரவில்லை. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக எமது நாடு மாத்திரமன்றி உலகின் அநேக நாடுகள் பலகாலம் தொடர்ச்சியாக முடக்கப்பட்டிருந்தன. அதனால் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்குப் பங்களிப்புச்செய்கின்ற பல்வேறு துறைகளும் சிக்கல்களுக்கு உள்ளாகியிருக்கின்றன. ஆகவே இவ்விடயத்தைப் பொறுத்தவரையில், குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதையும் பிரச்னைகளை மாத்திரமே சுட்டிக்காட்டுவதையும் விடுத்து, அவற்றுக்கான தீர்வுகளைக் காண்பதற்கு அரசாங்கத்திற்கு உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொருளாதாரத்தின் மீட்சிக்கு ஒவ்வொரு தரப்பினரும் பல்வேறு வழிமுறைகளையும் நிலைப்பாடுகளையும் கொண்டிருக்க முடியும். சிலர் வரையறுக்கப்பட்ட அல்லது தவறான தரவுகளை மாத்திரம் மேற்கோள்காட்டி, சர்வதேச நாணய நிதியத்திடம் உதவிகோருமாறு கூறுகின்றார்கள். ஆனால், அவ்வாறு கூறுகின்றவர்கள் கடந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்தபோது சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கோரியதால் ஏற்பட்ட நெருக்கடிகள் தொடர்பில் பேசுவதில்லை.

ஆகவே, இதுவிடயத்தில் எம்மிடம் மாற்றுயோசனைகள் உள்ளன. பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக ஏற்கனவே பல்வேறு செயல்திட்டங்களை வகுத்து, அவற்றை நடைமுறைப்படுத்தியிருக்கின்றோம். எம்மை வீழ்ச்சியுறச்செய்வது மாத்திரமே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். அதனை செவிமடுத்து, முறையற்ற கொள்கைகளை வகுப்பதற்கு நாம் தயாரில்லை.

இவ்வருட இறுதியில் பொருளாதார வளர்ச்சியை 6 சதவீதமாகப் பேணுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும் தற்போதைய சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் அது சற்றுக் கடினமானதாகவே அமையும். நாட்டில் நீண்டகாலத்திற்கு அதிதீவிர பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தமை அதற்குப் பிரதான காரணமாகும். எனினும் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் விரைவிலேயே நாட்டை மீளத்திறக்க முடிந்திருக்கிறது.



இவ்வாறானதொரு சூழ்நிலையில், அனைவருக்கும் வெகுவிரைவில் தடுப்பூசியைப் பெற்றுக்கொடுத்து ஏனைய நடவடிக்கைகளை இயல்பு நிலைக்குத் திருப்பவேண்டும். குறிப்பாக சுற்றுலாத்துறையின் செயற்பாடுகள் வழமை போன்று முன்னெடுக்கப்பட வேண்டும். வெளிநாடுகளிலிருந்து வருகைதரும் விமானங்கள் நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்கப்பட வேண்டும். சுற்றுலாத்துறை மூலம் நாட்டிற்குக் கிடைத்த வருமானம் கோவிட் - 19 வைரஸ் பரவல் காரணமாக முழுமையாக வீழ்ச்சியடைந்திருக்கிறது.

அதேபோன்று பயணக்கட்டுப்பாடுகளின்போது அனைத்து நிறுவனங்கள், வணிகங்களும் மூடப்படுவதால் அவற்றின் வருமானம் வீழ்ச்சியடையும். அதன் விளைவாக அவை அரசாங்கத்திற்குச் செலுத்துகின்ற வரியின் அளவிலும் வீழ்ச்சி ஏற்படும். மக்களின் உயிரைப் போன்றே அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதும் மிகவும் முக்கியமானதாகும். அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்வதுடன் தற்போதைய நிலை மேலும் மோசமடையாமல் பேணுவதற்கும் வெகுவிரைவில் இயல்புநிலையை அடைவதற்கும் அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவற்றின் ஊடாக வருட இறுதியில் 6 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்ள முடியாவிட்டாலும், 5 அல்லது 5.5 சதவீதம் வரையில் பொருளாதார வளர்ச்சியைப் பேணுவதற்கு எதிர்பார்க்கின்றோம்-என்றார்.

# கிபிர் விமானங்களை புதுப்பிக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 03

இலங்கை விமானப்படைக்கு சொந்தமான கிபிர் ரக தாக்குதல் விமானங்களை புதுப்பிப்பதற்காக இஸ்ரேல் விமான நிறுவனமொன்றுடன் பாதுகாப்பு அமைச்சு 5 கோடி டொலர் இணக்கப்பாட்டில் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த இணக்கப்பாட்டுக்கு அமைய, விமானங்களின் கட்டமைப்பு புதுப்பிக்கப்படவுள்ளதுடன், அவற்றுக்கு புதிய ராடர், தொலைத்தொடர்பு வசதிகள் மற்றும் மறைப்புகள் வழங்கப்படவுள்ளன.

இதனைத் தவிர, இலங்கை விமானப் படை உறுப்பினர்களுக்கு இந்த புதுப்பித்தல் தொடர்பிலான நிபுணத்துவப் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

# வெளிநாட்டிலிருந்து திரும்பிய 68 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஜூலை 03

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பியிருந்த மேலும் 68 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நேற்றுமுன்தினம் 1,883 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் புத்தாண்டுக் கொத்தணியில் 1,815 பேருக்கும், வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பியிருந்த 68 பேருக்கும் தொற்று உறுதியானது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து, நாட்டில் தொற்று உறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 60 ஆயிரத்து 972 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை, 30 ஆயிரத்து 55 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 27 ஆயிரத்து 840 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 3,120 ஆக எகிறியுள்ளது. (இ)

## அமரர் 'சண்' பிறந்ததினம் இன்று

# சண்முகதாசனின் அரசியல் தீர்க்கதரிசனம்

■ வீரப்பதி விநோதன்

இலங்கையின் இடதுசாரி அரசியல் வரலாற்றிலேயே குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஆரம்பகாலத் தலைவர்களில் நா.சண்முகதாசனும் ஒருவர். அவர் யாழ்ப்பாணம் - மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவராவார். அவருடைய தந்தையார் இறப்பர்த் தொழிற்சாலை உத்தியோகத்தராகப் பணியாற்றியவராவார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரும், பின்னாளில் அக் கட்சியின் சார்பில் உடுப்பிட்டித் தொகுதியின் எம்.பி.யாக விளங்கியவரும், 1965 ஆம் ஆண்டு ஆட்சிபீடமேறிய ஐ.தே.க. அரசாங்கத்தில் உப சபாநாயகராகப் பதவி வகித்தவரும் நல்லூர் எம்.பி.யாக தெரிவு செய்யப்பட்டவருமான மு. சிவசிதம்பரமும், சண்முகதாசனும் கொழும்பில் ஒரே அறையில் தங்கியிருந்து சட்டக் கல்லூரியில் கல்வி பயின்றமை குறிப்பிடத்தக்கது.

அவர் சட்டக் கல்லூரியில் பயின்ற காலத்திலேயே இடதுசாரி அரசியலில் ஈடுபாடு கொண்டதோடு, கல்வியின் பின் அக் காலத்தில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூலவராக விளங்கியவரும், லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் பயின்று பேராசிரியரானவருமான பொன். கந்தையாவுடன் இணைந்து தன்னையும் ஒரு கம்யூனிஸ்ட் ஆக்கிக்கொண்டார்.


சீனத் தலைவர் மாவோவுடன் சண்முகதாசன்

1949 ஆம் ஆண்டு சீனாவில் மாசேதுங் தலைமையில் மக்கள் சீனக் குடியரசு தோற்றுவிக்கப்பட்டபோது, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியெனவும் சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியெனவும் பிளவுபட்டது. அப்போது மாசேதுங்கின் சிந்தனைகளால் கவரப்பட்ட சண்முகதாசன், பிரேம்லால் குமாரசிறியை தலைவராகக் கொண்டிருந்த சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து தன்னையொரு முழுநேரக் கம்யூனிஸ்ட் கட்சிப் பணியாளராக்கிக் கொண்டார். சிறிது காலத்தின் பின்னர் அக் கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து பிரேம்லால் குமாரசிறி விலகக் கட்சியானது சண்முகதாசனை கட்சியின் பொதுச் செயலாளராக நியமித்துத் தலைமைப் பொறுப்பை அவரிடம் வழங்கியது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் கம்பஹா தொகுதியில் போட்டியிட்டு எம்.பியாகி அமைச்சராகவும் பதவி வகித்தவரான எஸ்.டி. பண்டாரநாயக்கவும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், 'சண்' அவர்களைப் பொதுச் செயலாளராகக் கொண்டிருந்த சீனச் சார்புக் கம்யூனிஸ்ட்கட்சியின் அரசியல் பாசறையில் இணைந்துதான் தமது அரசியல் வாழ்வை ஆரம்பித்திருந்தனர் என்பது வியப்புக்குரியவொன்றே.

அதுமட்டுமல்ல, 1971 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் இலங்கைத் தீவின் பாடசாலைகளின் கதவுகளெல்லாம் முதலாந் தவணை விடுமுறைக்காக மூடப்பட்டிருந்தபோது, பொதுவுடைமை ஆட்சியை நாடிக் கிளர்ச்சியொன்றை முன்னெடுத்த ரோஹகண விஜயவீரவும், சண்முகதாசனை பொதுச் செயலாளராகக் கொண்டிருந்த இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சீனச் சார்பு உறுப்பினராக இணைந்துதான் தன்னுடைய அரசியல் வாழ்வை ஆரம்பித்தார் என்பதும் தெரிந்ததே.

'சண்' ஈடினையற்ற மனிதாபிமானியாகவும், சர்வதேசியவாதியாகவும், 'மார்க்கிய-லெனினிஸ-மாவோயிஸ' சிந்தனையின் வழிநின்ற நிலை தழும்பாத கம்யூனிஸவாதியாகவும் தனது வாழ்நாள் முழுவதும் பணியாற்றியமையைப் பாராட்டுவது அன்னாரின் பிறந்தநாளின் போது நாம் அவருக்கச் செய்யும் கைமாறாகும்.



யாழ்ப்பாணக் குடாநாட்டின் பெருஞ் சாபக்கேடாக விளங்கிய தீண்டாமை அரக்கனை ஒழித்துக்கட்டுவதற்குப் பிரபல எழுத்தாளர் கே. டானியலின் தலைமையில் இயங்கிய தீண்டாமை வெகுஜன ஒழிப்பு இயக்கத்திற்கு அனுசரணையாகத் தனது கட்சியை வழிநடத்தினார். யாழ்ப்பாணத்தில் வாழும் தீண்டாமைக்கு ஆளாக்கப்பட்டோருக்கும், ஏனைய நலிவடைந்த மக்களுக்கும் "அடித்தால் திருப்பி அடி" என, இயேசு கிறிஸ்துநாதரின் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு என்னும் போதனைக்கு முற்றுமுழுக்க மாறான போதனையைச் 'சண்' வழங்கியமை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகும். யாழ். குடாநாட்டின் தீண்டாமைக்கெதிரான போராட்டத்தில் அவரின் பங்களிப்புப் பாரியளவாக அமைந்திருந்தது.

மேலும் 1971 ஆம் ஆண்டு சித்திரை மாதம் இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் ஆயுதக் கிளர்ச்சியின்போது அன்று பிரதமராகப் பதவி வகித்த சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் வீட்டுக்காவலில் சண் வைக்கப்பட்டிருந்ததோடு பின்னர் சிறை வைக்கப்பட்டுமிருந்தார்.

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் வெகுஜன அபிமானத்துடன் இயங்கிய தமிழ்க் குறியீடுகளைக் கொண்ட அரசியல் கட்சிகளின் அமெரிக்க ஏகாதிபத்திய சிங்கள முதலாளித்துவ நலனை அடியொற்றிய அரசியலை அப்பட்டமாக அம்மணமாக்கிய சண், அவ்வரசியல்வாதிகளினால் மேற்கொள்ளப்பட்டுவரும் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகள் நிச்சயமாக வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களை முற்றுமுழுதாக இல்லாதொழித்துவிடுமென மிகுந்த தீர்க்கதரிசனத்தோடும் தூரநோக்கோடும் கருத்துவெளியிட்டு வந்த அபாரமான அரசியல் ஞானியாகவும் விளங்கியிருந்தார்.

இன்றும்கூட தமிழ்க் குறியீட்டு அரசியல் கட்சிகள் 'சண்' தனது வாழ்நாள் முழுவதும் கூறிவந்த அடிப்படையிலேயே முட்டாள்தன்மையான அரசியலை முன்னெடுத்து வருகின்றார்களெனச் சிந்திப்பது நியாயமானதே.

இறுதியாகப் பிரதானமான தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து 'தமிழர் விடுதலைக் கூட்டணி' என்னும் பெயரைச் சூட்டி மகிழ்ந்ததோடு வட்டுப்கோட்டையில் "தமிழீழத் தனியரசு' என்னும் தீர்மானத்தையும் முன்மொழிந்தன. 1977 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் இக் கூட்டணியானது 'தனித் தமிழ் நாடு' என்னும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன்வைத்துத் தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்டு நின்றபோது, அதனால் மகத்தான வெற்றியையும் மிக இலகுவாக ஈட்டிக்கொள்ள முடிந்தது.

இவ்வாறான அர்த்தமற்ற பரபரப்பான அரசியல் சூழ்நிலையில்தான் சண், அவரின் இங்கிலாந்துப் பயணத்தின் சற்று முன்னரான காலப்பகுதியில் இலங்கைத் தமிழ் மக்களின் எதிர்காலம் தொடர்பில் ஆழமான அர்த்தம் தோன்றத்தக்கதான அறிக்கையொன்றைக் கொழும்பில் வெளியிட்டார். எப்போதுமே ஆழம் மிக்க - அர்த்தம் தோய்ந்ததான அரசியல் அறிக்கைகளை இலங்கை அரசியல் பரப்பில் வெளியிட்டு வந்தமையோடு வடபுலத்தின் தனித் தமிழ்ச் சித்து விளையாட்டுக்காரர்களுக்குச் சிம்மசொப்பனமாகவும் விளங்கிவந்த சண், தனது அரசியல் வாழ்வில் இறுதியாக வெளியிட்டிருந்த அறிக்கையே மேற்படி கொழும்பு அறிக்கையாகும்.

இவ்வறிக்கையின் சாராம்சம் "தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் தனித் தமிழீழ அரசு" என்னும் வட்டுக்கோட்டைத் தீர்மானமானது அவர்களால் அந்தரங்க சுத்தியுடன் மேற்கொள்ளப்பட்ட ஒன்றல்ல. இலங்கையில் 'தனித் தமிழ் நாடு' ஒன்றை அமைப்பதற்கான எந்த விதமான உருப்படியான திட்டமும் அவர்களிடம் இல்லை. மாறாக அவர்கள் 'தனித் தமிழ் நாடு' என்னும் கோரிக்கையைத் தமது பாராளுமன்றப் பிரவேசத்துக்கான வழமையான செல்வாக்கைப் பாரியளவில் அதிகரிக்கும் கபடத்தனம் மிக்கவொன்றாகவே வட்டுக்கோட்டையில் முன்னெடுத்துள்ளார்கள். நிச்சயமாக அவர்களுடைய இப்போலி நாடகம் வெகுவிரைவில் அம்பலமாகத்தான் போகின்றது.

அப்போதுதான் அவர்களை வெகுவாக நம்பிய வடபகுதி வாலிபர்கள் அவர்களின் மிகுந்த ஏமாற்றத்துக்கான நயவஞ்சகத்தைப் புரிந்துகொள்வதோடு தன்னிச்சையாக ஆயுதமேந்திப் போராடவும் முன்வருவார்கள். எனினும், சர்வதேசியளவில் நோக்கும்போது அவர்களுடைய போராட்டத்துக்கும் ஏனைய உலகலாவியளவிலான அடக்குமுறைகள் ஒடுக்குமுறைகள் ஆகியவற்றுக்கெதிரான போராட்டங்களுக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடு காரணமாக அவர்களின் போராட்டமானது குழப்பங்களும், குளறுபடிகளும் நிறைந்தவொன்றாகவே முடியும் என்றவாறாக அமைந்திருந்தது.

இவ்விடத்தில் 'சண்' குறிப்பிட்டிருந்த அடிப்படை வேறுபாடு என்பதன் உள்ளார்ந்தமானது தமிழ் இளைஞர்களின் ஆயுதமேந்திய போராட்டத்துக்குக் காரணமான தமிழீழம் என்னும் குறிக்கோளானது வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியத்தின் பெயரால் சிங்கள முதலாளித்துவத்தினதும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் நலனை முன்னிறுத்தி வேலை செய்த அப்பிராந்தியத்தைச் சேர்ந்த தமிழர் பிரதிநித்துவத்தின் பரிணாம வளர்ச்சியின் பெறுபேறான ஒன்றாகவே அமைந்திருந்தது என்பதாகவே இருக்கமுடியும்.

அவருடைய இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததைப் போலவே தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் நிலைப்பாடு அமைந்திருந்ததோடு தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போராட்டமும் களையிழந்தவொன்றாகவே நடுநிலையாளர்களை மிகவும் வேதனையுறவும் வைத்திருந்தது.

மனிதத்தையே தனது வாழ்நாள் முழுவதும் நேசித்த ஈடிணையற்ற சர்வதேசியவாதியான மாமனிதர் நா. சண்முகநாதன் இங்கிலாந்து தேசத்தின் மான்செஸ்டர் மாநகரில் உயிர்நீத்தார். கொழும்பிலே இலங்கைத் தமிழ் மக்களினதும், அம்மக்களுக்குள் வதியும் இளையோரினதும் எதிர்காலம் தொடர்பில் அவர் இறுதியாக வெளியிட்டிருந்த அரசியல் அறிக்கையின் சாராம்சம் சிறிதளவேனும் பொய்த்துப்போகவில்லை என்னும் பேருண்மையொன்றுதான் அன்னாரின் அபாரமான அரசியல் ஆழத்துக்கும், இணையற்ற அரசியல் ஞானத்துக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகவுள்ளது. ■



# 'ட்ரோன்' தாக்குதல்களை எதிர்கொள்ள இந்தியா தயாரா?

■ ராகவேந்திர ராவ்

**“சில ஆண்டுகளாகவே, பாகிஸ்தானிலிருந்து ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப் எல்லைகளுக்கு ஆயுதங்கள், வெடிமருந்துகள், போதைப் பொருட்களை கடத்த ட்ரோன்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், ஒரு விமான தளத்தின் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது, ட்ரோன்களின் துல்லியமான பயன்பாட்டுத் திறன் அதிகரித்துள்ளதையே காட்டுகிறது.”**

ஜுன் 27 அன்று, இந்திய விமானப்படையின் ஜம்மு விமான தளத்தின் மீது நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதல், இந்தியாவின் பாதுகாப்பு அமைப்புகளுக்கு எச்சரிக்கை மணி எழுப்பியுள்ளது. ட்ரோனில் வெடிபொருட்களை வைத்து இந்திய ராணுவத்தை குறிவைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட இத்தகைய சம்பவம் இது தான் முதல் முறை.

ஜம்மு விமானப்படை தளத்தின் தொழில்நுட்பப் பிரிவில் இரண்டு குறைந்த தீவிர வெடிப்புகள் ஏற்பட்டதாக இந்திய விமானப்படை அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ள நிலையில், ட்ரோன்களைப் பயன்படுத்தி இந்த தாக்குதல் நடத்தப்பட்டது தெளிவாகியுள்ளது. இந்தத் தாக்குதலை இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் நடத்தும் மறைமுகப் போரின் புதிய அத்தியாயமாக பாதுகாப்பு வல்லுநர்கள் கருதுகின்றனர்.

கடந்த சில ஆண்டுகளாகவே, பாகிஸ்தானிலிருந்து ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப் எல்லைகளுக்கு ஆயுதங்கள், வெடிமருந்துகள், போதைப்பொருட்களை கடத்த ட்ரோன்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், ஒரு விமான தளத்தின் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது, ட்ரோன்களின் துல்லியமான பயன்பாட்டுத் திறன் அதிகரித்துள்ளதையே காட்டுகிறது.

**எல்லையில் பறக்கும் ட்ரோன்கள்**

பல ஆண்டுகளாக, இந்திய-பாகிஸ்தான் எல்லையில் அவ்வப்போது ட்ரோன்கள் பறந்து கொண்டுதான் இருக்கின்றன. பாதுகாப்புப் படையினர் ட்ரோன் அல்லது ட்ரோன் போன்ற சாதனத்தை எப்போதெல்லாம் எதிர்கொள்கிறார்களோ அப்போதெல்லாம், சம்பந்தப்பட்ட அனைத்துப் பாதுகாப்பு அமைப்புகளுக்கும் அது குறித்த தகவலை தெரிவிக்கின்றனர் என பெயர் குறிப்பிட விரும்பாத எல்லைப் பாதுகாப்புப் படை (பி.எஸ்.எஃப்) அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

கடந்த ஆண்டு ஜுன் மாதம், பாகிஸ்தானில் இருந்து எல்லை தாண்டி, கத்துவா வந்த ட்ரோனை எல்லைப் பாதுகாப்புப் படை சுட்டு வீழ்த்தியது. இந்த ட்ரோன் சுட்டு வீழ்த்தப்பட்டபோது, அதிலிருந்து ஒரு செமி ஓட்டோமேட்டிக் கார்பைன் துப்பாக்கி, வெடிமருந்துகள் மற்றும் கையெறி குண்டுகள் மீட்கப்பட்டன. இந்த ட்ரோனின் எடை சுமார் 18 கிலோ இருக்கலாம், அது 5-6 கிலோ எடையைச் சுமந்து பறந்து கொண்டிருந்தது. இந்த ட்ரோனின் பெரும்பாலான பகுதிகள் சீனாவில் தயாரிக்கப்பட்டவை என பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**எதிர்கொள்ள இந்தியா தயாரா?**

இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் ட்ரோன்கள் தொடர்ச்சியாகப் பறக்கும் நிலையைக் கொண்டு, ட்ரோன்கள் ஆயுதமாகப் பயன்படுத்தப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை யூகிக்க முடிகிறது. ஜம்மு தாக்குதலுக்குப் பிறகு, இதுபோன்ற தாக்குதல்களைச் சமாளிக்க இந்தியா தயாரா என்பது குறித்து விவாதிக்கப்படுகிறது.

டில்லியில் இருந்து இயங்கும் இன்ஸ்ரிரியூட் ஒவ் கான்ஃபிளிட் மனேஜ்மென்ட் என்ற அமைப்பின் நிர்வாக இயக்குநர் அஜய் சாஹ்னி. பி.பி.சியிடம் பேசிய அவர், “இந்தியப் பாதுகாப்புத் துறை எதிர்வினையில் ஒரு சிக்கல் என்னவென்றால், அது ஒரு எதிர்வினை மட்டுமே என்பதுதான். பாதுகாப்புத் துறையின் தேவைகளை அதிகாரிகளே முன்னெடுக்கின்றனர். ஆனால், உயர் மட்டத்தில் உள்ளவர்களுக்குத் தொழில்நுட்ப ரீதியான புரிதல் அதிகம் இருப்பதில்லை” என்று கூறுகிறார்.

மேலும் அவர், “2016-17க்குப் பிறகு, பயங்கரவாதிகள் பல இடங்களில் ஆயுதம் தாங்கிய ட்ரோன்களைப் பயன்படுத்தினர். ஐ.எஸ் அமைப்பு, சிரியாவில் இதைப் பயன்படுத்தத் தொடங்கியது. அவர்கள் வெடிபொருட்களை ஏற்றிய ட்ரோன்களுடன் தாக்குதல்களை நடத்தினர். இவை மிகவும் அதிநவீன கருவிகள் அல்ல. இவை வணிகரீதியாக கிடைக்கக்கூடிய ட்ரோன்கள்தான். அவற்றில் தேவையான வெடிபொருட்களை நிரப்பி, இலக்கை நிர்ணயித்துத் தாக்குதல் நடத்தமுடியும்” என்று விளக்குகிறார் அவர்.

**ட்ரோன் தாக்குதல்கள் அபாயகரமானவை**

ட்ரோன் மிகவும் பயனுள்ள ஒரு கருவியாக இல்லாவிட்டாலும், மிகப்பெரிய பேரழிவுத் தாக்குதல்களை துல்லியமாக நடத்தப் பயன்படும் ஆபத்தான கருவி என்கிறார் சாஹ்னி. “எல்லை தாண்டிய தாக்குதல்கள் ட்ரோன்களால் ஏற்படக்கூடிய மிகப்பெரிய அச்சுறுத்தல். ஆயுதங்கள் மற்றும் பிற தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கடத்துவதற்குக் கடந்த சில ஆண்டுகளாக பாகிஸ்தான் தொடர்ந்து ட்ரோன்களைப் பயன்படுத்தி வருகிறது. ஒவ்வொரு மாதமும் 2-3 ட்ரோன் பிடிப்பு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அவை பல முறை சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன. அவர்கள் 10 கிலோ அல்லது அதற்கு மேற்பட்ட எடையைச் சுமக்கும் திறன் கொண்ட ட்ரோன்களைப் பயன்படுத்துகிறார்கள். 10 கிலோ இராணுவ தர வெடிபொருளைக் கொண்டு இலக்கைத் தாக்கும் திறன் இருந்தால், அது பெரிய அளவிலான அழிவை ஏற்படுத்தும் “ என அவர் விளக்குகிறார்.

இதனால்தான் முன்பை விட ட்ரோன்களின் ஆபத்துகள் குறித்து இந்தியாவில் அதிக விழிப்புணர்வும் தயார் நிலையும் இருந்திருக்க வேண்டும் என சாஹ்னி கருதுகிறார்.

“இந்தப் பிரச்னைகள் அனைத்தும் பாதுகாப்புப் படையில் விவாதப்பொருளாக நிச்சயம் இருக்கும். ஆனால், யார் அவர்கள் சொல்வதைக் கேட்கிறார்கள்? தங்களுக்குள்ளேயே பேசிக்கொள்வதைத் தாண்டி அவர்களால் எதுவும் செய்ய முடியாது. பாதுகாப்புப் படையினர் ஒருவித தற்காப்பு நெறிமுறையை உருவாக்கி உயிரிழப்புகளைக் குறைக்க முடியும். ஆனால், இதற்கான முடிவுகளை எடுக்கும் அதிகாரம் அரசியல் மற்றும் அதிகார அமைப்புகளிடம்தான் உள்ளது” என்கிறார் சாஹ்னி.

**புதிய அபாயம்**

ட்ரோன் தாக்குதல்களை “பயங்கரவாதத்தின் ஒரு புதிய பரிமாணம்” என்று இந்திய இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் எஸ்.பி.அஸ்தானா குறிப்பிடுகிறார். பி.பி.சியிடம் பேசிய அவர், “ட்ரோன்கள் பல முறை பயன்படுத்தப்பட்டுள்ளன. அது அஜர்பைஜான் - ஆர்மீனியா மோதல் அல்லது ஹமாஸுடனான இஸ்ரேலின் மோதலாக இருந்தாலும், ட்ரோன்கள் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த காலங்களிலும் பாகிஸ்தானியர்கள் சில ஆயுதங்களையும் போதைப் பொருட்களையும் விநியோகிக்க ட்ரோன்களைப் பயன்படுத்தியுள்ளனர். தற்போதைய நிகழ்வில், ட்ரோன்களைப் பயன்படுத்துவதில் கொஞ்சம் துல்லியத்தன்மை அதிகரித்துள்ளது. அதுதான் தற்போது கவலைக்குரிய விஷயம். இந்த துல்லியம் என்பது இதற்குப் பின்னால் ஒரு நிபுணரின் பங்களிப்பு இருந்திருக்கும் என்பதைத்தான் காட்டுகிறது.” என்று கூறுகிறார்.

ஒரு ட்ரோனில் வெடிபொருட்களை நிரப்பி, சரியான நேரத்தில் சரியான இடத்தில் வெடிப்பதை உறுதி செய்வது, அதன் பின்னால் ஒரு நிபுணர் இருப்பதைக் காட்டுகிறது என்று அஸ்தானா கூறுகிறார். ட்ரோன்கள் வெடித்துச் சிதறி விடுவதால், அது குறித்த தகவல்களைத் திரட்டுவது கடினமாகிவிடுகிறது.

“இது ஓர் அச்சுறுத்தலாக வளர்ந்து வருவதால் அதற்கேற்ப தொழில்நுட்பத்தை உருவாக்க வேண்டும். எங்களிடம் சில அமைப்புகள் உள்ளன. அனைத்து விமான நிலையங்களும் வான் பாதுகாப்பு ஆயுதங்களால் பாதுகாக்கப்படுபவை. ஒரு ட்ரோன் மிக மெதுவாகப் பறந்தால், விமான எதிர்ப்புத் துப்பாக்கியால் அதைச் சுட்டு வீழ்த்த முடியும். அதற்கு ஏவுகணைகள் அல்லது உயர் தர ரேடார்கள் தேவையில்லை” என்கிறார் அஸ்தானா.

ஒரு ட்ரோன் அதிநவீன வகை ட்ரோனாக இருந்தால் மட்டுமே மிக வேகமாகப் பறக்க முடியும். ஜம்மு தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட ட்ரோன் மிகவும் மெதுவாகப் பறந்ததாகவே அவர் கூறுகிறார். “நீங்கள் குறைந்த உயரத்தில் துல்லியமாக நோக்கினால், ஒரு வேளை இத்தகைய ட்ரோன்களை இலக்கு வைக்கலாம்” என்பது இவர் கருத்து.

**தீர்வு என்ன?**

“ட்ரோன்கள் குறைந்த உயரத்தில் பறப்பதால், அவற்றைக் கண்டுபிடிப்பது கடினமாகிறது. ஆனால், உங்கள் ட்ரோன்கள் சாதாரண ட்ரோன்களை விட அதிக உயரத்தில் பறந்தால், அவை குறைந்த உயரத்தில் பறக்கும் ட்ரோன்களைக் கண்டறிய முடியும்” என்று அவர் கூறுகிறார்.

கண்காணிப்புக் கருவிகள் நாடு முழுவதிலும் எல்லா இடங்களிலும் இருக்க முடியாது என்று சாஹ்னி கூறுகிறார். “ஒவ்வொரு தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கும் ஒரு தொழில்நுட்ப எதிர்மறைச் செயல்பாடு உள்ளது. அவற்றை நாம் எந்த அளவிற்கு பயன்படுத்துகிறோம், அவை எந்த அளவு பயனுள்ளதாக இருக்கும் என்பதுதான் கேள்வி” என்கிறார் அவர்.

இந்தியாவில் பொதுவாகவே, ஒரு எதிர்வினை என்பது ஒரு குறியீடாகவே ஏற்றுக்கொள்ளப்படுகிறது என சாஹ்னி கருதுகிறார். “ஒரு ட்ரோன் காற்றில் பறக்கத் தொடங்கிய உடனேயே அதைக் கண்டறிந்து பதிலடி கொடுக்கும் வகையில் திறன் கொண்ட ஒன்று நமக்கு மிகவும் தேவை” என்று அவர் கூறுகிறார்.

இஸ்ரேலின் ஏவுகணை எதிர்ப்பு தொழில்நுட்பமான அயர்ன் டோமை உதாரணமாக மேற்கோள் காட்டுகிறார் சாஹ்னி, “அது ஆயிரக்கணக்கான ஏவுகணைகளை செயலிழக்கச் செய்யும் திறன் கொண்டது. இருப்பினும் சில ஏவுகணைகள் தப்பிவிடுவதும் உண்டு. அச்சுறுத்தல் இருக்கும் பகுதிகளில் குறைந்தபட்ச சேதத்துடன் சரியான எதிர்வினை ஆற்றக்கூடிய ஒரு அணுகுமுறை தேவை. இதற்குச் சிறப்பான திட்டமிடல் தேவை. ஆனால் முடிவெடுக்கும் அதிகார அமைப்பின் செயல்படும் முறை மிகவும் திறமையற்றதாக, நிலைமையை உணரமுடியாததாக இருப்பது துரதிர்ஷ்டம்” என்கிறார் அவர்.

சந்தையில் ட்ரோன்கள் எளிதில் கிடைப்பது, பயங்கரவாதிகளுக்கு அவற்றை மேம்படுத்தி ஆயுதமாக பயன்படுத்தும் வாய்ப்பைக் கொடுக்கின்றன என்று அஸ்தானா கூறுகிறார். ஒரு சாதாரண ட்ரோனை ஆயுதமாக மாற்ற முடியும் என்றால், அது குறித்து இந்தியா கவனம் செலுத்த வேண்டும். இப்படி ஒரு வகையான தொழில்நுட்பம் இருக்கிறது, அதைப் பயன்படுத்துவது ஆபத்தானது. ஜம்முவில் அது ஒரு கூரையை மட்டுமே தாக்கியது, ஆனால் அது ஒரு போர் விமானத்தைத் தாக்கிப் பெரிய சேதத்தை ஏற்படுத்தியிருக்கவும் கூடும் என்பது கவலைக்குரிய விஷயம்” என்று எச்சரிக்கிறார் அஸ்தானா.

பி.பி.சி.

■

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை - 8 நேரம் - 45 நிமிடம்
வினாத்தாள் II ஆசிரியர் - மு.வே.அன்பழகன்

01) பின்வரும் பந்தியை வாசித்து (i) தொடக்கம் (viii) வரையான வினாக்களுக்கு விடைகளை பந்தியில் இருந்து தெரிவு செய்து எழுதுக.

> ஓவியங்கள் கண்ணுக்கு விருந்தளிப்பவை ; சிந்திக்கும் ஆற்றலைத் தூண்டுபவை ; குறிப்பால் பொருள் உணர்த்தும் தன்மை கொண்டவை ; மனதிற்கு அமைதியைத் தருபவை. உலக ஓவியர்களால் வரையப்பட்ட, மனதைக் கவரும் ஓவியங்கள் பல உள்ளன. அவற்றுள் ஒரு சிலவே உலகப் புகழ் பெறுகின்றன. அவ்வாறு உலகப் புகழ் பெற்ற ஓவியங்களுள் முதன்மையானது "மோனாலிசா" ஓவியமாகும். உலகில் வேறு எந்த உருவப் படத்திலும் இல்லாத அழகு இவ்வோவியத்தில் பிரகாசிக்கின்றது.

i) கண்ணுக்கு விருந்தளிப்பவை எவை? ..............................
ii) உலகப் புகழ் பெற்ற ஓவியங்களுள் முதன்மையானது? ..............................
iii) "வடிவு" என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக? ..............................
iv) "ஆரவாரம்" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக? ..............................
v) மடக்கேறும் அரவும் உள்ள சொல்லை எழுதுக? ..............................
vi) "விருந்தளிப்பவை" என்பதைப் பிரித்து எழுதுக?..............................

02) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுங்கள்
i) மிருகங்கள் காடுகளில் .............................. திரிந்தன.
(அழைத்து, அலைந்து, அளைந்து)
ii) கமலா பூக்களைக் கொண்டு .............................. தயாரித்தாள்.
( மலர்செண்டு, மலச்செண்டு, மலர்ச்செண்டு)

03) தனிச்சொல்லை எழுதுங்கள்
1. சுதந்திரமற்று வாழ்பவன் : ..............................
2. தன்னைப் பற்றித் தானே புகழ்தல் : ..............................

04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியாயின் (☺) அடையாளத்தையும் பிழையாயின் (☹) அடையாளத்தையும் எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது இடுங்கள்.
(அ)
i) யானைக் கூட்டம் ஓடியது. (..........................)
ii) ஒவ்வொரு பாடலும் நல்லவை. (..........................)

(ஆ)
1) நானும் நீயும் .............................. (பாடினேன், பாடினோம்)
2) வேகமாக வீசிய காற்றினால் மரங்கள் அங்குமிங்கும் .............................. (அசைந்தாடியது, அசைந்தாடின)

05) சரியான சொல்லை வெற்றிடத்தில் எழுதுக.
i) மிருகங்கள் .............................. (ஊன், ஊண்) தேடி அங்குமிங்கும் அலைந்தன.
ii) அவன் காலில் உள்ள காயத்தால் .............................. (வலி, வழி, வளி) தாங்கமுடியாது அழுதான்.

06) ஆண், பெண் மரபுகளை எழுதுக.

| | ஆண் | பெண் |
|---|---|---|
| குதிரை | .............................. | .............................. |




07) கீழே தரப்பட்ட வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்ட வாக்கியத்தை தெரிவு செய்க.
1) நாங்கள் யானைகள் சரணாளயத்திற்குச் சென்றோம்.
2) நாங்கள் யாணைகள் சரணாளயத்திற்குச் சென்றோம்.
3) நாங்கள் யானைகள் சரணாலயத்திற்குச் சென்றோம்

08) "சிரமதானம்" என்னும் சொல்லில் உள்ள சில எழுத்துக்களைக் கொண்டு ஆக்கத்தக்க கருத்துள்ள சொல் இரண்டு எழுதுக? .............................., ..............................

09) துயரம், புண்ணியம் என்ற இரு சொற்களிலும் உள்ள "து , பு" என்னும் எழுத்துக்களில் இடப்பட்டுள்ள உயிர்க்குறிகளின் பெயர்களை அடைப்புக்களில் இருந்து தெரிவு செய்து வெற்றிடத்தில் எழுதுக.
i) "து" ..............................(ஒற்றைக்கொம்பு, கீழ்க்கால், மடக்கேறு, கீழ்க்காலும் சுழியும்)
ii) "பு" ..............................(கீழ்க்காலும் சுழியும், மடக்கேறு, கீழ்க்கால், இரட்டைக்கொம்பு)

10) பின்வருவன உணர்த்தும் கருத்தை எழுதுக.
i) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் - ..............................
ii) கனி இருக்கக் காய் கவருதல் போல - ..............................

11) பின்வரும் படங்கள் குறிக்கும் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.

i)  ..............................
ii)  ..............................
iii)  ..............................

12) தமிழ்க்கருத்தை எழுதுக.
i) Clap your hands - ..............................
ii) Where is your School? - ..............................
iii) Lets go to the library - ..............................





13) "நாங்கள் தண்ணீர் குடிப்போம்" என்ற வாக்கியத்தின் சிங்கள உச்சரிப்பினை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
..............................

14) "ஸ்த்துதி ஆயெத் என்ன" என்ற சிங்களத்தொடர் உணர்த்தும் தமிழ்க்கருத்தை எழுதுக.
..............................

15) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
01. வித்து முளைப்பதற்கு அவசியமற்ற காரணி
1. வளி 2. நீர் 3. சூரிய ஒளி 4. வெப்பம்

02. இலங்கையை இறுதியாக தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த அந்நிய நாட்டவர்
1. ஒல்லாந்தர் 2. ஆங்கிலேயர் 3. சீனர் 4. ஜப்பானியர்

03. நான்கு மாணவர்கள் தயாரித்த நான்கு மின்காந்தங்களில் அதிகம் கவரும் தன்மையுள்ள மின்காந்தம் யாது?


1.

2.

3.

4.

ஈழநாடு

# பயங்கரவாத தடுப்பு சட்டம் மீள்பரிசீலனை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இலங்கை உறுதி

## 16 தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்தும் தெளிவுபடுத்தல்

கொழும்பு, ஜூலை 03

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் நல்லிணக்கத்தின் முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இலங்கை விளக்கமளித்துள்ளது.

இதன்படி தற்போதுள்ள சட்டங்கள், கடந்தகால நடைமுறைகள் மற்றும் சர்வதேச நடைமுறைகள் குறித்து ஆய்வு செய்தல் மற்றும் 1979 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் விதிகளை மறுபரிசீலனை செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் ஜூன் 25 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அறிவிக்கப்பட்டது என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மீளாய்வு செய்து அது தொடர்பான அறிக்கையை மூன்று மாதங்களுக்குள் அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை துணைக்குழு மற்றும் அதிகாரிகள் குழுவை நியமிக்கவென ஜூன் 21ஆம் திகதி அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இதன்போது விளக்கமளிக்கப்பட்டது எனவும் வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்ற மற்றும் தண்டனை அனுபவித்த முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் 16 பேருக்கு, அரசமைப்பின் 34ஆவது பிரிவின் படி ஜூன் 24ஆம் திகதி ஜனாதிபதி வழங்கிய பொதுமன்னிப்பு குறித்தும் ஐரோப்பிய ஒன்றியத்துக்குத் தெளிவுபடுத்தப்பட்டது எனவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



அத்துடன், தற்போதைய நல்லிணக்க வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தெளிவுப்படுத்தப் பட்டுள்ளதுடன், இழப்பீட்டு அலுவலகத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி குறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்துக்கு விளக்கமளிக்கும் குறித்த கலந்துரையாடலின் போது, ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது எனவும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (இ)

---

## உயர்கல்விக்காக வெளிநாடு செல்லவிருக்கும் மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 03

உயர்கல்விக்காக வெளிநாடு செல்லவுள்ள மாணவர்களுக்குக் கொரோனாத் தடுப்புக்கான சினோபார்ம் தடுப்பூசி ஏற்றும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று கொரோனா பரவல் தடுப்புக்கான செயலணி தெரிவித்துள்ளது.

எனவே, தடுப்பூசியைப் பெற எதிர்ப்பார்க்கும் மாணவர்கள் அதற்கான முன்பதிவைச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

https://pre-departure-vaccine.covid19.gov.lk/ என்ற இணையத் தளத்துக்குப் பிரவேசிப்பதன் ஊடாக முன்பதிவைச் செய்துகொள்ள முடியும். (இ)

---

## ஒரு கோடி ரூபாய் பெறுமதியான மதுபானம், சிகரெட்கள் சிக்கின

கொழும்பு, ஜூலை03

நீர்கொழும்பு - தலுபொத்த பிரதேசத்தில் பெருந்தொகையான மதுபானம் மற்றும் சிகரெட்டுகள் கைப்பற்றப் பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட மதுபானம் மற்றும் சிகரெட்களின் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபாய் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்பின்போதே



இவை கைப்பற்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (இ)

---

## சவால்கள் வந்தாலும் இலங்கையுடனான ஒற்றுமை மென்மேலும் வலுப்படுத்தப்படும்

### சீனத் தூதரகம் நம்பிக்கை



**கொழும்பு, ஜூலை 03**

**“சீனாவும் இலங்கையும் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று ஆதரவாகவும் பக்கபலமாகவும் செயல்பட்டு வந்துள்ளன. தற்போதும் பல்வேறு சவால்கள் காணப்படும் நிலையிலும் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒற்றுமை மேலும் வலுப்படுத்தப்படும்.”**

-இவ்வாறு சீனத் தூதரகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

சீன கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்டு 100 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளமையை முன்னிட்டு இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் அதன் உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பதிவில் மேலும் கூறப் பட்டிருப்பதாவது:-

“சீன கம்யூனிஸ்ட் கட்சி கடந்த 1921 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி உதயமானது. ஆரம்பத்தில் சுமார் 50 உறுப்பினர்களைக் கொண்டிருந்த அந்தக் கட்சி கடந்த நூறு ஆண்டுகளில் சுமார் 9 கோடி உறுப்பினர்களைக் கொண்ட கட்சியாக வளர்ச்சியடைந்திருக்கிறது.

அது மாத்திரமன்றி உலகின் அமைதிக்கும் அபிவிருத்திக்கும் பெருமளவில் பங்களிப்பு செய்யக்கூடிய நாடாக சீனா சிறந்த முறையில் வழிநடத்திச் செல்கின்றது.

கடந்த 100 வருட காலத்தில் சுதந்திரத்திற்காகவும் இறையாண்மைக்காகவும் போராடிய தருணங்களிலும் ஒற்றுமையையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட சந்தர்ப்பங்களிலும் சீனாவும் இலங்கையும் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று ஆதரவாகவும் பக்கபலமாகவும் துணை நின்று செயல்பட்டு வந்துள்ளன.

தற்போது பல்வேறு சவால்கள் காணப்பட்டாலும், அதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒற்றுமை மேலும் வலுப்படுத்தப்படும்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைத்திருப்பும் சீன - இலங்கை நட்புறவும் நெடுங்காலத்துக்குத் தொடரவேண்டும்” - என்றுள்ளது. (இ)

---

## கொரோனாவை கட்டுப்படுத்த மேலும் சில இடங்கள் முடக்கம்!

கொழும்பு, ஜூலை 03

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நேற்றுக் காலை 6 மணி முதல் மேலும் சில பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா இந்தத் தகவலை அறிவித்துள்ளார்.

அதற்கமைய, இரத்தினபுரி, கம்பஹா, கொழும்பு மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 5 பிரதேசங்களே இவ்வாறு தனிமைப்படுத்தப் பட்டுள்ளன.

அதேவேளை, கம்பஹா மற்றும் மாத்தளை மாவட்டங்களைச் சேர்ந்த சில பிரதேசங்கள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.



இரத்தினபுரி மாவட்டத்தின் கிரியெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாட்டுவாகலை தோட்டத்தின் மேற்பிரிவு, கம்பஹா மாவட்டத்தின் வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெந்தலை வடக்கு கிராம சேவகர் பிரிவின் ஓலந்த கிராமம் மற்றும் வத்தை தோட்டம், கொழும்பு மாவட்டத்தின் நுகேகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒபேசேகரபுர (514 சி) கிராம சேவகர் பிரிவு, நுவரெலியா மாவட்டத்தின் பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டியாகல தோட்டத்தின் கீழ்ப் பிரிவு ஆகிய பிரதேசங்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தின் பியகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யட்டிஹேன கிராம சேவகர் பிரிவின் பொல்ஹேன வீதி, லேக்வீவ் வீதி, முதலீட்டு சபை வீதி (வாவி வீதி சந்தி வரையான பகுதி) தனிமைப் படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே அம்மாவட்டத்தின் மீகஹவத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சியாம்பலாபே கிராம சேவகர் பிரிவின் தேவாலய வீதி, ஆரியதாச விதானகே மாவத்தை, ஆரியதாச விதானகே மாவத்தையின் முடிவிடம், சியம்பலாபேவத்தை கந்து பொட வீதி ஆகிய பகுதிகளும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மாத்தளை மாவட்டத்தின் மஹவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெமதஓய (ஈ 417/ஏ) கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ)

---



## அரசியல் பழிவாங்கல் தொடர்பில் முறைப்பாட்டை பதிவுசெய்ய குழு

### நியமித்தது பிரதான எதிர்க்கட்சி

கொழும்பு, ஜூலை 03

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்வதற்காகவும், முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்காகவும் விசேட குழுவொன்றை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கியுள்ளது.

அக்குழுவின் தலைவராக மாத்தளை மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகார நியமிக்கப் பட்டுள்ளார். இதற்கான நியமனம் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் நேற்றுமுன்தினம் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய ஆட்சியின் கீழ் பழிவாங்கல் படலம் தொடர்கின்றது எனவும், நேர்மையாகச் செயல்படும் அரச ஊழியர்கள் கூட ஒடுக்கப்படுகின்றனர் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# சீனா அணு ஆயுதங்கள் குவிப்பு; அமெரிக்கா ஆழ்ந்த கவலை!



வாஷிங்டன், ஜூலை 03

சீனாவின் அணு ஆயுத குவிப்பு குறித்து அமெரிக்கா கவலை கொண்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் தெரிவித்துள்ளார்.

கொன்சூ மாகாணத்தில் சீனா 100இற்கும் மேற்பட்ட அணு ஆயுத ஏவுகணை கிடங்குகளை வைத்திருக்கின்றது என்று வாஷிங்டன் போஸ்ட் அண்மையில் செய்தி வெளியிட்டது.

கொன்சூ மாகாணத்தில் உள்ள 119 கட்டுமான தளங்கள் அணுசக்தி ஏவுகணைகளுக்கான ஏவுதள வசதிகளை கொண்டிருப்பது போன்று செயற்கைக் கோள் புகைப்படங்கள் மூலம் தெரியவருவதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த விவகாரம் குறித்து வெள்ளை மாளிகையில் வியாழக்கிழமை செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ்,

"சீனாவின் அணு ஆயுதக் குவிப்புக் குறித்து அமெரிக்கா கவலை கொண்டுள்ளதாகவும் அணு ஆயுத கட்டமைப்பை பலப்படுத்துவதில், எதிர்பார்த்ததைவிட சீனா மிக விரைவாக முன்னேறி வருகிறது", என்றார்.

மேலும், "இதுபோன்ற ஆயுதக் குவிப்பை அவ்வளவு எளிதாக மறைத்துவிட முடியாது. அணுசக்தி அபாயங்களை குறைக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தை இது வலுவாக்குகிறது. பல தசாப்த கால அணுசக்தி கட்டுப்பாட்டு மூலோபாய கொள்கையில் இருந்து சீனா விலகிச் செல்வதை இது எடுத்துக்காட்டுகிறது", என்றார்.

இதேசமயம், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டுவிழாவில் பேசிய அந்த நாட்டின் தலைவர் ஜி ஜின்பிங், "சீனாவை யாராவது ஒடுக்க நினைத்தால் அவர்களின் தலைகளை சீனப் பெருஞ்சுவரில் அடித்து நொறுக்குவோம்", என்று கூறியமை அமெரிக்காவுக்கான மறைமுக எச்சரிக்கையா? என்று செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அவர், ஜி ஜின்பிங் கருத்துக்களை வெளியுறவுத்துறை கவனத்தில் எடுத்துள்ளது. ஆனால், அமெரிக்கா குறித்து நேரடியாகக் குறிப்பிடப்படாத இந்தப் பேச்சு குறித்து கருத்து தெரிவிக்க விரும்பவில்லை - என்றார். (ஐ)



## பஹ்ராம் படைத்தளத்திலிருந்து வெளியேறியது அமெரிக்க படை!

காபூல், ஜூலை 03

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா - நேட்டோ படைகளின் மிகப்பெரிய படைத்தளமான பஹ்ராமிலிருந்து படைகள் வெளியேறின. இந்த முகாம் கடந்த 20 வருடங்களாக அமெரிக்காவின் மிகப் பிரதான தளமாக இருந்தது.

செப்ரெம்பர் 11 ஆம் திகதிக்கு முன்னதாக ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் முற்றாக வெளியேறும் என்று ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்திருந்தார்.

ஆனால், ஆப்கான் தலைநகர் காபூலுக்கு வடக்கே பரந்து விரிந்துள்ள தளத்திலிருந்து தலிபான்கள் முன்னேறி வருகின்றன.

அமெரிக்கா தனது மிக நீண்ட யுத்தத்தையும் - பெரும் செலவினத்தையும் முடிவுக்குக் கொண்டுவர விரும்புகின்றது. ஆப்கானிஸ்தானில் தற்போது 2,500 தொடக்கம் 3,500 படையினரே உள்ளனர். பஹ்ராம் படைத்தளத்திலிருந்து அமெரிக்க - நேட்டோ படைகள் 7 ஆயிரம் பேர் வெளியேறின. இதனால், தற்போது ஆயிரம் வரையிலான அமெரிக்கப் படைகளே ஆப்கானில் நிலைகொண்டுள்ளன.

அமெரிக்காவின் வெளியேற்றத்தால் உள்நாட்டுப் போர் மிகப்பெரியதாகலாம். தலிபான்களின் கை தற்போது அங்கு ஓங்கியுள்ளது. தற்போது அமெரிக்காவின் வலிமையாக உள்ள பஹ்ராம் படைத்தளம் முன்னர் சோவியத் ஒன்றியத்தின் கோட்டையாக இருந்தது. இது விரைவில் ஆப்கானிஸ்தான் இராணுவத் திடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

2001ஆம் ஆண்டு அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் தனது போர் நடவடிக்கையை தொடங்கியபோது இந்தத் தளத்தில் 10 ஆயிரம் படையினர் தங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 2020இல் நான்கில் ஒருவருக்கு பாதுகாப்பான தண்ணீர் இல்லை!

### உலக சுகாதார அமைப்பு யுனிசெவ் கூட்டறிக்கை

World Health Organization
unicef

ஜெனிவா, ஜூலை 03

2020ஆம் ஆண்டு நான்கில் ஒருவருக்கு பாதுகாப்பான குடிதண்ணீர் கிடைக்கவில்லை. அத் துடன் உலக மக்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோருக்கு பாதுகாப்பான சுகாதாரம் கிடைக்க வில்லை என்றும் உலக சுகாதார அமைப்பும் - ஐ. நாவின் சிறுவர்களுக்கான அமைப்பான யுனிசெவ்வும் வெளியிட்ட கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அமைப்பு நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,

கொரோனா பெருந்தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ள அனைவரும் அடிக்கடி கை கழுவுதல் மூலம் நல்ல சுகாதாரத்தை பெற முடியும் என்பதன் அவசியத்தை உலக சுகாதார அமைப்பு உணர்த்திய நிலையில், தொற்றுநோய் தொடங்கியபோது, உலகளவில் 10 பேரில் 3 பேர் வீடுகளில் சவர்க்காரம் மற்றும் தண்ணீரால் கைகளை கழுவ வில்லை என்பது தெரிய வந் துள்ளது.

2016 மற்றும் 2020இற்கு இடையில், உலக மக்கள் தொகையில் பாதுகாப்பான குடிதண்ணீரை வீட்டில் பெறு வோர் தொகை 70வீதத்தில் இருந்து 74 வீதமாக உயர்ந்தது. கை கழுவுவதற்கான சவர்க் காரம் மற்றும் தண்ணீர் வசதி 67 வீதத்திலிருந்து 71 வீதமாக உயர்ந்தது.

சுகாதார நடவடிக்கைகளில் முன்னேற்றங்கள் இருந்தபோதிலும் தற்போதைய சூழ்நிலையில் இது போதாது. உலகில் சஹாரா - ஆபிரிக்க நாடுகளில் மிகவும் குறைவான முன்னேற்றத்தை எட்டியுள்ளது.

அவசர சுகாதார முதலீட்டின் தேவையை சுட்டி காட்டியும், உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு வீடுகளில் பாதுகாப்பாக நிர்வகிக்கப்படும் குடிதண்ணீர், சுகாதாரம் மற்றும் சுகாதார சேவைகளின் முன்னேற்றம் நான்கு மடங்காக அதிகரிக்காவிட்டால் 2030 இல் சுகாதாரம் பாதிப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அந்த அறிக்கை எச்சரித்துள்ளது. (ஐ)

## பழங்குடியின புதைகுழிகளால் சோபை இழந்தது கனடா தினம்!




ரொறன்ரோ, ஜூலை 03

வருடாந்தம் ஜூலை முதலாம் திகதி கோலாகலமாகக் கொண்டாடப்படும் கனடா தேசிய தினம் இம்முறை சோபையிழந்தது. முன்னாள் குடியிருப்பு பாடசாலைகளில் பழங்குடியின சிறுவர்களின் புதைகுழிகள் அடுத்தடுத்து கண்டுபிடிக்கப்பட்டன. இதையடுத்தே தேசிய தினம் களையிழந்தது.

இதேசமயம், கொண்டாட்டத்துக்குப் பதிலாக பழங்குடியின மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும்விதமாக பேரணிகள், ஆர்ப்பாட்டங்களை மக்கள் நடத்தினர்.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் இரு குடியிருப்பு பாடசாலைகளிலும், சஸ்காட்செவன் மாகாணத்தில் ஒரு குடியிருப்பு பாடசாலையிலும் ஆயிரத்து 200இற்கும் மேற்பட்ட பழங்குடி சிறுவர்களின் எச்சங்களுடன் புதைகுழிகள் கண்டறியப்பட்டன.

இந்த குடியிருப்பு பாடசாலைகளை கத்தோலிக்க மத பீடங்கள் நடத்தின. பழங்குடி சிறுவர்கள் கட்டாய அடிப்படையில் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு தாய் மொழி உரிமை மறுக்கப்பட்டதுடன் சொந்த கலாசார அடையாளமும் அகற்றப்பட்டது. அத்துடன் உடல், உள ரீதியில் அவர்கள் துன்புறுத்தப்பட்டனர். சிறு இடங்களுக்குள் ஏராளமான சிறுவர்கள் அடைக்கப்பட்டமையால் நோயாலும் கூட சிறுவர்கள் இறந்தனர்.

இந்த நிலையிலேயே, பழங்குடியினருக்கு ஆதரவு தெரிவித்து, கனடா தேசிய தினத்தை இரத்து செய்ய வலியுறுத்தும் (#Cancel Canada Day) அணிவகுப்பில் ஆயிரக் கணக்கான கனடியர்கள் ஒரேஞ்ச் நிற உடைகளை அணிந்து ஒன்றுகூடினர்.

"இனப்படுகொலையில் எந்தப் பெருமையும் இல்லை" என எழுதப்பட்ட பதாகைகளை அவர்கள் ஏந்திச் சென்றனர். (ஐ)



## செப்ரெம்பருக்கு முன்னர் 10 வீதம் பேருக்கு தடுப்பூசி!

### தொற்றை கட்டுப்படுத்த இதுவே வழி!

ஜெனிவா, ஜூலை 03

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் ஒவ்வொரு நாடும் குறைந்தபட்சம் தங்கள் மக்கள் தொகையில் 10வீதம் பேருக்கு தடுப்பூசி செலுத்த வேண்டும் என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ராஸ் அதனோம் அறிவுறுத்தியுள்ளார்.

கொரோனாவை கட்டுப்படுத்த தடுப்பூசியே ஒரே வழி. இந்த ஆண்டு இறுதிக்குள் 40 சதவீத மக்களுக்கும், அடுத்த ஆண்டு நடுப்பகுதிக்குள் 70 சதவீதம் மக்களுக்கும் தடுப்பூசி செலுத்தி முடிப்பது தான் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்தவும், உலக பொருளாதாரத்தை மீண்டும் வளர்ச்சிப்பாதைக்கு கொண்டு வரவும் இதுதான் சிறந்த வழி. ஒவ்வோர் இடத்திலும் கொரோனா தொற்றை முடிவுக்கு கொண்டுவரும் வரை, எந்த இடத்திலும் நம்மால் தொற்றை ஒழிக்க முடியாது - என்றார். (ஐ)

# ஒருநாள் தொடரையும் இழந்தது இலங்கை!

ஒவல், ஜுலை 03

இலங்கைக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியை 8 விக்கெட்களால் வெற்றி கொண்டது இங்கிலாந்து அணி. இதன் மூலம் ஒருநாள் தொடரையும் இங்கிலாந்து தன்வசப்படுத்தியது.

இங்கிலாந்துக்கு சென்றுள்ள இலங்கை அணி இருபது - 20, ஒருநாள் தொடர்களில் விளையாடுகிறது. முன்னதாக, இருபது - 20 தொடரை 3 - 0 என்ற இலங்கை இழந்தது. ஒருநாள் தொடரில் முதல் போட்டியை இழந்த இலங்கை அணி நேற்று முன்தினம் இங்கிலாந்துக்கு எதிராக இரண்டாவது போட்டியில் களமிறங்கியது.

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதனால், இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்கம் கொடுத்த குஷல் பெரேரா ஓட்டம் எதையும் பெறாமலும், பதும் நிஷங்க 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த அவிஸ்க பெர்னாண்டோ 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

எனினும் நான்காவது விக்கெட்டுக்காக களமிறங்கிய தனஞ்சய டி சில்வா சிறப்பான ஆட்




டத்தை வெளிப்படுத்தினார். எனினும் மறுமுனையில் அவருக்கு பெரியளவில் கைகொடுக்கவில்லை. இருந்தபோதும், ஆறாவது வீரராக வந்த வனிந்து ஹசரங்க 26, தசூன் சானக 47, சமிக கருணாரத்ன 21 என்று ஓரளவு கைகொடுக்க தனஞ்சய டிசில்வா 91 பந்துகளில் 13 பௌண்ட்ரிகளுட்ன 91 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 241 ஓட்டங்களை எடுத்தது.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் சாம் கரன் 5, டேவிட் வில்லி 4 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு ஜசொன் றோய், ஜொன்னி பெயர்ஸ்ரோ இணை தொடக்கம் கொடுத்தது.

சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்திய இந்த இணை 76 ஓட்டங்களைப் பெற்ற போது பிரிந்தது. பெயர்ஸ்ரோ 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 29 ஓட்டங்களைப் பெற்று வனிந்து ஹசரங்கவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் அதிரடி காட்டிய றோயுடன் இணைந்து ஜோ ரூட்டும் அதிரடி காட்டினார். அரைச்சதம் கடந்த றோய் 10 பௌண்ட்ரிகளுடன் 60 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது கருணாரத்னவின் பந்தில் தனஞ்சயவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

43 ஓவர்களில் இங்கிலாந்து அணி 2 விக்கெட்களை மட்டும் இழந்து 244 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

ரூட் 5 பௌண்ட்ரிகளுடன் 68 ஓட்டங்களையும், இயன் மோர்கன் 8 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 75 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

போட்டியின் நாயகனாக சாம் கரன் தெரிவானார். (ஐ)



# விம்பிள்டன் ரென்னிஸ்; ஆஷ்லே பார்டி வெற்றி!

லண்டன், ஜுலை 03

விம்பிள்டன் ரென்னிஸின் மூன்றாவது சுற்றுக்கு அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடக்கிறது. இதில் பெண்களுக்கான இரண்டாவது சுற்றில் பெண்கள் பிரிவில் நடந்த ஆட்டம் ஒன்றில்,

முதல்நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்டியை ரஷ்யாவின் பிளின்கோவாவை எதிர்கொண்டார். இதில் பார்டி, 6 - 4, 6 -3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)



# விம்பிள்டன் ரென்னிஸ்; பெடரர் முன்னேற்றம்!

லண்டன், ஜுலை 03

விம்பிள்டன் ரென்னிஸின் மூன்றாவது சுற்றுக்கு ரோஜர் பெடரர் இலகுவாக முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடக்கிறது.

இதில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் இரண்டாவது சுற்று போட்டியில் 20 கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்ற சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் பிரான்ஸின் காஸ்குட்டை எதிர் கொண்டார்.

இந்தப் போட்டியில் பெடரர் 7 -6, 6 -1, 6- 4 என்ற செற்களில் இலகுவாக வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

இதேபோன்று, ஆறாம் நிலை வீரரான ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் 7-5, 6-2, 6-3 என்ற நேர் செற்றில் டெனிஸ் சான்ட்கிரீனை (அமெரிக்கா) சாய்த்து 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இலங்கைக்கு 13 போட்டிகள்!

கொழும்பு, ஜுலை 03

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியின் இரண்டாவது தொடர் (2021 - 2023) எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதல் ஆரம்பமாகிறது. இதில், இலங்கை அணி 13 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

முதலாவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் நியூஸிலாந்து மகுடம் சூடியது. இந்தத் தொடரில் இலங்கை அணி 12 போட்டிகளிலேயே விளையாடியது. இதில் இரு போட்டிகளில் வெற்றியும், 6 போட்டிகளில் தோல்வியும், 4 போட்டிகள் சமநிலையிலும் முடிவடைந்தன.

ஆனால், இந்தப் பருவ காலத்தில் இலங்கை அணி 13 போட்டிகளில் விளையாடவுள்ளது.




# 100 பந்து கிரிக்கெட்: வில்லிமஸன் விலகல்!

வெலிங்டன், ஜுலை 03

இங்கிலாந்தில் நடைபெறவுள்ள 100 பந்து கிரிக்கெட் போட்டியிலிருந்து நியூஸிலாந்து அணியின் கேன் வில்லியம்சன் விலகியுள்ளார்.

இங்கிலாந்து அறிமுகப்படுத்தும் 100 பந்து கிரிக்கெட் போட்டியை அறிமுகப்படுத்துகிறது. 8 அணிகள் பங்கேற்கும் இந்தப் போட்டி இந்த மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இந்தத் தொடரிலிருந்து பர்மிங்ஹாம் பீனிக்ஸ் அணியில் இடம்பெற்றிருந்த வில்லியம்ஸன் விலகியுள்ளார். கையில் ஏற்பட்ட காயம் காரணமாகவே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

முன்னதாக அவுஸ்திரேலியாவின் டேவிட் வோர்ணர், மக்ஸ்வெல், ஸ்ரொய்னிஸ் ஆகியோரும் இந்தப் போட்டியிலிருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜப்பானில் ஒலிம்பிக் திருவிழா




ரோக்கியோ, ஜுலை 03

விளையாட்டு உலகின் மிகப் பிரதானமான ஒலிம்பிக் திருவிழா இம்மாதம் 23 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 8 ஆம் திகதி வரை ஜப்பானின் தலை நகரான ரோக்கியோவில் நடைபெற உள்ளது. அதனைத் தொடர்ந்து பாராலிம்பிக் விளையாட்டு 24 ஒகஸ்ட் முதல் செப்ரெம்பர் 5 வரை நடைபெறும்.

நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் ஒலிபம்பிக் கடந்த ஆண்டு ரோக்கியோவில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது. உலகை அச்சுறுத்திய கொரோனா காரணமாக ஒத்திவைக்கப்பட்ட ஒலிம்பிக் போட்டிகள் 23 ஆம் திகதி கோலாகலமாக ஆரம்பமாகிறது.

பெரும்பாலான போட்டிகள் கிரேட்டர் ரோக்கியோவிலும்,சில உதைபந்தாட்டம், மரதன் ஆகியவை ஹொக்கைடோவில் உள்ள சப்போரோவிலும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஜப்பானுக்குள் நுழைவதற்கு சுமார் 159 நாடுகளுக்குத் தடை விதிக்கப்பட்டதால் வெளிநாட்டுப் பார்வையாளர்கள் கலந்துகொள்ள முடியாத நிலை உள்ளது. பத்தாயிரம் ஜப்பானிய ரசிகர்கள் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒலிம்பிக்கில் வெற்றி பெறுபவர்களுக்கு அணிவிக்கப்படும் பதக்கங்கள் பெறுமதியானவை. அந்தப் பதக்கங்களில் கிரேக்கர்களின் வெற்றிக் கடவுளான பார்க்கப்படும் நைக் என்ற பெண் கடவுளின் உருவமும், ஒலிம்பிக் போட்டி பற்றிய விபரமும், , ஒலிம்பிக்கின் சின்னமான ஐந்து வளையங்களும் பொறிக்கப்பட்டிருக்கும்.

பதக்கத்தின் விட்டம் 85 மி.மீ அளவில் இருக்கும். தடிமன் குறைந்த பட்சம் 7.7மி.மீ ஆகவும், அதிகபட்சம் 12.1மி.மீ ஆகவும் இருக்கும். தங்கப் பதக்கம் 556 கிராம், வெள்ளி 550 கிராம், வெண்கலம் 450 கிராம் என்ற நிறையில் இருக்கும். தங்கப் பதக்கத்தில் 6 கிராம் அளவிற்கு தங்கமும், சுத்தமான வெள்ளியும் கொண்டு தயார் செய்யப்படுகிறது. வெள்ளிப்பதக்கம் முற்றிலுமாக வெள்ளியை கொண்டே தயார் செய்யப்படுகிறது. வெண்கல பதக்கம் 95வீதம் காப்பர் மற்றும் 5வீதம் சிங் என்ற இரசாயனக் கூறுகளால் உருவாக்கப்படுகிறது.

ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கு ஜப்பானின் தலைநகரம் தயாராகும் தருணத்தில் அங்கு வழும் மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். கொரோனாவின் தாக்கம் ஜப்பானை விட்டு முழுமையாக நீங்கவில்லை என்பதால் 85வீதம் மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றனர்.

# பாராளுமன்றம் வருகின்றார் பஸில் ராஜபக்ஷ விமல், கம்மன்பில, வாசு விடைபெறுவார்களா?




## சஜித் அணியின் எம்.பி. சமிந்த விஜேசிறி கேள்வி

கொழும்பு, ஜூலை 03

"இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் பாராளுமன்றம் வருவதற்கு அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். எனினும், இரட்டைக் குடியுரிமையுடைய பஸில் பாராளுமன்றம் வரவுள்ளார். அப்படியானால் மேற்படி அரசியல் தலைவர்கள் என்ன செய்யப்போகின்றார்கள்? அவர்கள் அரசிலிருந்து விடை பெறுவார்களா?"

- இவ்வாறு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது.

பஸில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற வருகை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே எதிர்க்கட்சி உறுப்பினரான சமிந்த விஜேசிறி இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். அதற்கான சக்திவாய்ந்த பிரமுகரே பஸில் ராஜபக்ஷவென பரப்புரை முன்னெடுத்து, நாடகமாடி அவரைப் பாராளுமன்ற உறுப்பினராக்கி, அமைச்சுப் பதவியை வழங்குவதற்கான முயற்சியில் ஆளுங்கட்சி ஈடுபட்டு வருகின்றது.

இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் அரசியலில் ஈடுபடுவதற்கும், அரச கட்டமைப்பில் உயர் பதவிகளை வகிப்பதற்கும் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் கடந்த காலங்களில் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். தற்போது இரட்டை குடியுரிமையுடைய பஸில் பாராளுமன்றம் வந்து அமரப்போகின்றார். எனவே, மேற்படி மூவரும் எவ்வாறான அரசியல் முடிவை எடுக்கப் போகின்றனர் என்பது தொடர்பில் அறிய நாமும் நாட்டு மக்களும் ஆர்வமாக உள்ளோம்" - என்றார்.

இரட்டைக் குடியுரிமையுடையவர்கள் பாராளுமன்றம் வருவதற்கும், அரச சேவைகளில் உயர்பதவிகளை வகிப்பதற்கும் விமல், கம்மன்பில மற்றும் வாசு தரப்பினர் 20ஆவது திருத்தச் சட்டம் முன்வைக்கப்பட்டபோது கடும் அழுத்தங்களைப் பிரயோகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# சு. கவை பலப்படுத்த ஓரணியாக வாருங்கள்

## வெல்கமவுக்கு தயாசிறி அழைப்பு

கொழும்பு, ஜூலை 03

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஒன்றிணைந்து பயணிப்பதற்கு முன்வருமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவுக்கு, சு.கவின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி. அழைப்பு விடுத்துள்ளார்.

சுதந்திரக் கட்சியை மீட்கும் நோக்கில் புதிய கட்சியை குமார வெல்கம ஆரம்பிக்கவுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கூட்டு எதிரணிப் பக்கம் இருந்த குமார வெல்கம, அதன் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தி பக்கம் தாவினார். தற்போது ஏதோ வொரு கட்சியை உருவாக்கியுள்ளார். அவரால் தனியாக கட்சியைப் பலப்படுத்த முடியாது.



எனவே, சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்துவதற்கு எம்முடன் இணையுமாறு குமார வெல்கமவுக்கு அழைப்பு விடுக்கின்றோம். எமது கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுள் அவரும் ஒருவர்" - என்றார்.

அதேவேளை, நாட்டில் நிலவும் பிரச்னைகள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி திட்டமிட்டுள்ளது எனவும் தயாசிறி எம்.பி. மேலும் கூறினார். (இ)



# குளவி கொட்டி ஐவர் வைத்தியசாலையில்

பொகவந்தலாவை, ஜூலை 03

பொகவந்தலாவை - பிரிட்வெல் தோட்டத்தில் ஐவர் குளவிக்கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தொழிலாளர்கள் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த இடத்தில் காணப்பட்ட மரத்திலிருந்த குளவிக் கூடொன்றின் மீது வல்லூறு மோதியதால், குளவிகள் திடீரென்று கலைந்து, அவர்களைக் கொட்டியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# பழைய முறைமையிலேயே தேர்தலை நடத்த வேண்டும்




## அநுரகுமார எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 03

ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தல் பழைய முறைமையிலேயே நடத்தப்பட வேண்டும் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க எம்.பி. வலியுறுத்தினார்.

தேர்தல் முறைமை சீர்திருத்தம் தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றுடன் நடைபெற்ற சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தேர்தல் முறைமை சீர்திருத்தம் ஊடாக நாட்டை மீண்டும் இரு கட்சி முறைமைக்கு கொண்டு செல்வதற்கே தற்போதைய அரசு முயற்சிக்கின்றது.

நாட்டில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட தேர்தலை முறைமை மாற்றங்களில் விகிதாசார தேர்தலை முறைமையே முற்போக்கான, ஜனநாயகமான தேர்தல் முறைமையாக விளங்குகின்றது.

இந்த முறைமையை மாற்றுவதாக இருந்தால் தற்போது இருப்பதைவிடவும் மேலும் சிறந்த முற்போக்கான, ஜனநாயகம்மிக்க புதிய முறைமையாகவே இருக்கவேண்டும்.

உள்ளூராட்சி சபை, மாகாண சபை, பாராளுமன்றம் ஆகியவற்றில் சிறு கட்சிகளின் பிரதிநிதித்துவமும் மக்களின் சார்பில் இருக்கவேண்டும். அதேபோல் அனைத்து தேர்தல்களுக்கும் சம முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும். ஜனநாயகத்தின் அடிப்படை அம்சமும் இதுதான்.

அதேவேளை, எல்லை நிர்ணயப் பிரச்னையால் மாகாண சபைகளுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எனவே, பழைய முறைமையின் கீழ் அதற்கான தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனச் சந்திப்பில் இணக்கம் காணப்பட்டது.

விகிதாசார தேர்தல் முறைமையின் கீழ் தெரிவாகும் பாராளுமன்றம் பலவீனமாக இருந்தால் அதனை சமநிலைப் படுத்துவதற்காகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இருக்கின்றது. எனவே, விகிதாசார தேர்தல் முறைமையில் மறுசீரமைப்பு இடம்பெறுமானால் கட்டாயம் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நீக்கப்படவேண்டும்.

உள்ளூராட்சி சபை, மாகாண சபை, பாராளுமன்றம் ஆகிய மூன்றுக்கும் ஒரே தேர்தல் முறைமை இருக்கவேண்டும். இவை தொடர்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது. எமது யோசனைகள் தெரிவிக்குழுவில் முன்வைக்கப்படும். ஏனைய கட்சிகள் மற்றும் அமைப்புகளை சந்திக்கவும் திட்டமிட்டுள்ளோம்" - என்றார். (இ)


## வைத்திய சேவை

கிருமித் தொற்றுக் காரணமாக வைத்தியசலைக்குச் செல்லாமல் வீடுகளில் இருக்கும் நோயாளர்களே உங்களுக்காக வெளிநோயாளர் பிரிவு (OPD) ஆரம்பம்

காலை 8 மணி முதல் 11 மணிவரை

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**
**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**
**077 873 0129**

## தொழிற்சாலை விற்பனைக்கு

வவுனியா, வடக்கு புளியங்குளம் பகுதியில் இருக்கும் ஓர் ஏக்கர் காணியில் அமைந்த 6,500 சதுர அடி கொண்ட 3 Phase மின்சார இணைப்புடன் கூடிய உடன் பாவனைக்கு உகந்த புதிய கட்டடம் விற்பனைக்கு உண்டு.

விவரங்களுக்கு
nnconsultancy9@gmail.com
அல்லது + 65 96182105 என்ற வாட்ஸ்அப் இலக்கத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

## கடல்சார்...

கிய இந்தியாவிற்கு நன்றியினையும் தெரிவித்தார்.

எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தின் போது அவசர உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கிய இந்திய கடலோர காவற்படை மற்றும் இந்தியக் கடற்படையினருக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு கொழும்பு துறைமுகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய கடற்றொழில் அமைச்சர்,

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எமது அவசர கோரிக்கையை ஏற்று, தேவையான அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்கிய இந்திய அரசாங்கம் மற்றும் இந்திய கடற்படை, இந்திய கடலோர காவற்படை ஆகியவற்றுக்கு இலங்கை அரசாங்கத்தின் சார்பாகவும் இலங்கை மக்கள் சார்பாகவும் நன்றி தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கைக்கு உதவிகளும் ஒத்துழைப்புகளும் தேவைப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் உடனடியாக உதவுகின்ற இந்தியா கப்பல் விபத்தின் போதும், விரைந்து வந்து தமது உதவிகளை வழங்கியிருந்தன. எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீயை கட்டுப்படுத்துவற்கு மாத்திரமன்றி, ஏற்பட்ட பாதிப்புக்களை மதிப்பிடுவதிலும் இந்தியாவின் ஒத்துழைப்பு எமக்கு பேருதவியாக அமைந்திருந்தது.

எதிர்காலத்திலும், கடலுக்கு அடியில் இருக்கின்ற கொள்கலன்களை கண்டறிந்து அவற்றை பாதுகாப்பாக அப்புறப்படுத்துவதற்கான தொழில் நுட்ப உதவிகளை இந்தியாவிடம் இருந்து பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கிறனறோம்" என்று தெரிவித்தார்.

## தாதியர்களின்...

பதி அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே, ஜனாதிபதி இந்த தீர்மானங்களை மேற்கொண்டார்.

தாதியர் பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தல், நல்லாட்சி அரசாங்க காலத்தில் 2017. 12. 07ஆம் திகதிய 32/2017ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் ஊடாக இடைநிறுத்தப்பட்ட பணிக்குழாம் நிலையை மீண்டும் வழங்குதல், இடைநிறுத்தப்பட்டுள்ள வகுப்பு III இலிருந்து வகுப்பு II க்கு பதவி உயர்வை ஐந்தாண்டுகளிலும் மற்றும் வகுப்பு II இலிருந்து வகுப்பு I க்கு ஏழு ஆண்டுகளிலும் தரம் உயர்த்துதல், ரூ .20,000 வருடாந்த சீருடைக் கொடுப்பனவை வழங்குதல், தற்போதைய 36 மணிநேர வேலை நேரத்தை வாரத்துக்கு ஐந்து நாட்கள் (30 மணிநேரம்) நேரமாகக் கருதுவதை விசேட குழுவொன்றின் ஆய்வுக்கு உட்படுத்தல் ஆகிய ஐந்து விடயங்களையும் உடனடியாக நடைமுறைப்படுத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

ரூ .10,000 கொடுப்பனவு மற்றும் 2014.12.24 ஆம் திகதியன்று நிதி அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை சம்பளத்தின் 1/100 மேலதிக சேவைக் கொடுப்பனவு ஆகியவற்றை எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக வழங்க, ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார். அதன்படி, அரச சேவை தாதியர் சங்கம் முன்வைத்த ஏழு கோரிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி அவர்கள் விசேட கவனம் செலுத்தியுள்ளார். அரச சுகாதாரத் துறை மீது அரசாங்கத்துக்கு மிகுந்த நம்பிக்கை இருப்பதாகவும் தாதியர் சேவைக்கு கூடிய அங்கீகாரத்தை அளிப்பதாகவும், தாதித் தொழில் வல்லுநர்களுக்கு உரிய இடத்தை வழங்குவதாகவும், ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர் சங்கைக்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரர், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, சுகாதார அமைச்சின் செயலாளர் (ஓய்வுபெற்ற) மேஜர் ஜெனரல் விசேட மருத்துவ நிபுணர் சஞ்ஜீவ முனசிங்க, சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன ஆகியோரும் அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் உறுப்பினர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## 100 மாணவர்...

நூற்றுக்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட 2 ஆயிரத்து 962 பாடசாலைகள் நாட்டில் உள்ளன என்று கல்வி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது அமைச்சர் பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

முதற்கட்டமாக குறித்த பாடசாலைகளை திறப்பதற்கான திட்டத்தை செயல்படுத்த நேற்றுமுன்தினம் ஜனாதிபதியுடன் நடைபெற்ற சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சுகாதாரத் தரப்பினரின் அனுமதியுடன் 100 மாணவர்களுக்கும் குறைவானோரைக் கொண்ட பாடசாலைகளை இம்மாதத்துக்குள் திறப்பதற்கு கல்வி அமைச்சு முயற்சிக்கின்றது. எனினும், இதற்கு முன்னர் ஆசிரியர்களுக்குத் தடுப்பூசி வழங்கப்பட வேண்டும்.

நாட்டில் 2 இலட்சத்து 42 ஆயிரம் ஆசிரியர்கள் உள்ளனர். இந்நிலையில், அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு அடுத்த வாரம் முதல் கொரோனாத் தடுப்பூசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியை ஜனாதிபதி வழங்கியுள்ளார்" - என்றார். (இ)

## யாழ்ப்பாண...

தொற்று அதிகமுள்ள பகுதிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் இரண்டாம் கட்டடத் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் நிறைவடைந்தவுடன் இவற்றை மக்களுக்கு வழங்கும் பணிகள் ஆரம்பமாகும் என்றும், தடுப்பூசி வழங்கும் மையங்கள் தொடர்பில் அதிகாரிகள் விரைவில் அறிவிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே முதற்கட்டமாக வழங்கப்பட்ட இரண்டு கட்டங்களுக்குமான தடுப்பூசிகளை யாழ்.மாவட்ட மக்கள் ஆர்வத்தோடு பெற்றுக்கொண்ட காரணத்தால், இந்த மேலதிக 50 ஆயிரம் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது என நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளரும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

மேலும், அடுத்தகட்ட தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும், யாழ். மாவட்ட மக்கள் அனைவருக்கும் தடுப்பூசிகள் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையிலும் உரிய தரப்பினருடன் தொடர்ச்சியாகப் பேசி வருவதாகவும் அவர் மேலும் கூறினார். (இ - 03)

## 1,737 பேருக்கு...

சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 62 ஆயிரத்து 709 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன்,கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,701 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 29 ஆயிரத்து 541 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 11 ஆக அதிகரித்துள்ளது.

# வீட்டில் ஏற்பட்ட விபத்துகள் நடப்பு ஆண்டில் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை 03

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த வருடத்தில் வீட்டுக்குள் நடக்கும் விபத்துக்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று சுகாதார மேம்பாட்டு பணியக வளாகத்தில் ஊடகங்களுடன் பேசிய,

தொற்றுநோயற்ற நோய்கள் பிரிவின் நிபுணர் மருத்துவர் சமித சிறிதங்க, "கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த நீண்டகால பயணக் கட்டுப்பாடுகளின் விளைவாக மக்கள் தங்கள் வீடுகளில் அடைத்து வைக்கப்பட்டிருப்பதே விபத்துக்கள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணம் என்றார்.

வீட்டு விபத்துக்களில் பெரும்பாலானவை விலங்குக்கடியால் பாதிக்கப்பட்ட சம்பவங்களாகும். இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட 60 முதல் 69 சத வீதமாக அதிகரித்துள்ளது.

வீட்டுக்குள் ஏற்பட்ட விபத்துக்களில், விழுந்து ஏற்பட்ட காயங்களும் அதிகமாக உள்ளன. இது 2020 உடன் ஒப்பிடும் போது 50 முதல் 72மூ வரை அதிகரித்துள்ளது. இருப்பினும் கடந்த ஆண்டுடன் ஒப் பிடும்போது வீதி விபத்துக்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது என்றார். (ஐ)

# 'நெடுவாழ்வின் எழுதித் தீரா நினைவு'

## தொகுப்பு நூல் வெளியீடும் நினைவுப் பகிர்வும்



டொமினிக் ஜீவா தொகுப்பு நூல் வெளியீடும் நினைவுப் பகிர்வும் நாளை ஞாயிறு மாலை 7.00 மணிக்கு Zoom கலந்துரையாடலாக இடம்பெறவுள்ளது.

இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி (பிரான்ஸ்) ஒழுங்கு செய்யும் இந்த நிகழ்வுக்கு தேவதாசன் தலைமை தாங்குகிறார்.

நினைவுப்பதிவுகளை, டொமினிக் ஜீவாவின் மகன் திலீபன் டொமினிக், மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப், கவிஞர் மேமன் கவி, இலங்கை எழுத்தாளர் சங்க செயலாளர் கமல் பெரேரா ஆகியோர் வழங்க, தொகுப்பு நூல் குறித்தான உரைகளை எழுத்தாளர்களான விஜி, மல்லியப்புசந்தி திலகர், சிராஜ் மஷ்ஹூர், ரங்கன் ஆகியோர் வழங்க உள்ளனர். உரைகளைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறும்.

ஆர்வமுள்ள இலக்கிய ஆர்வலர்கள் . Zoom : 830 2340 8850- Password : 842312 எனும் முகவரியின் ஊடாக இணைந்துக்கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## மேலும் 37 பேர்...

வர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 157 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 37 பேரில் 25 ஆண்களும், 12 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய உயிரிழந்த ஆண்களில் ஒருவர் 30 வயதுக்கு மேற்பட்டவர். ஐவர் 30 முதல் 59 வயதுக்கு உட்பட்டவர்கள். 19 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். அதேவேளை, பெண்களில் மூவர் 30 முதல் 59 வயதுக்கு உட்பட்டவர்கள். ஒன்பது பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள்.(இ)

## ஜி.எஸ்பி. சலுகை...

பட்டோரினால் மேற்கொள்ளப்படும் போராட்டமானது எதிர்வரும் திங்கட்கிழமை, 1600ஆவது நாளை எட்டவுள்ளது. இதனால் அன்றைய தினம் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம்.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி.வரி சலுகையை, பயங்கரவாத சட்டத்தை அகற்றுவதற்கு மட்டுமல்லாமல் அரசியல் தீர்வுக்கும் பயன்படுத்த வேண்டும்.

மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி.வரி சலுகையை நிறுத்துவது பற்றிய பேச்சின் காரணமாக, இலங்கை அரசில் ஓர் பதற்றமான சூழ்நிலை காணப்படுவதை அதன் நடவடிக்கையின் ஊடாக அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

அத்துடன் ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்க ஜனாதிபதி பைடன் நிர்வாகத்தின் ஆசீர்வாதத்துடன் இலங்கையில் அரசியல் தீர்வை அடைய முடியும். தமிழர்களிடையே 'பொது வாக்கெடுப்பு' எடுப்பதன் ஊடாக இந்த தீர்வை அடைய முடியும்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்க மத்தியஸ்தத்துடன் தமிழர்களுக்கான அரசியல் தீர்வை முன்வைக்க ஐரோப்பிய ஒன்றியத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்-என்றார்.

## சண்டிலிப்பாய்...

ளப்பட்டிருந்த பரிசோதனையில் இவ்வாறு சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மேலும் 39 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக ஆய்வுகூட வட்டாரங்கள் தெரிவித்தன.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசிக்கும் 239 பேரின் மாதிரிகள் இவ்வாறு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் அப்பிரதேசத்தை சேர்ந்த பெண்கள் 21 பேர் மற்றும் ஆண்கள் 18 பேர் என மேலும் 39 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எல்லை தாண்டும்...

றவுச் சங்கங்களின் சமாசம் தலைவரும் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் உப தலைவருமான நாகராசா வர்ணகுலசிங்கம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த இரண்டு மாத காலமாக வடக்கு கடலில் எல்லை தாண்டிய இந்திய மீனவர்களின் அத்துமீறல் இல்லாத நிலை காணப்பட்டத நிலையில் நேற்று முன்தினம் முதல் மீண்டும் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடி வடக்கு கடற்பகுதியில் இடம்பெறுகிறது.

இதனால் தமது நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் கடற்தொழில் உபகரணங்கள் சேதம் அடைந்துள்ளன.

இது தொடர்பாக பல காலமாக இலங்கை இந்திய-பிரதிநிதிகளுடன் பேசியும் எந்தவிதமான இழப்பீடுகளோ நிவாரணங்களோ கிடைக்கவில்லை.

தற்போதும் மீண்டும் எல்லை தாண்டிய இந்திய மீனவர்களினால் பாதிக்கப்படும் நிலையில் தொடர்ந்தும் இவ்வாறு எமது வாழ்வாதாரத்தை மீனவர்கள் இழக்க முடியாது.

எனவே எல்லை தாண்டிய இந்திய மீனவர்களை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு ஜனாதிபதி பிரதமர் மற்றும் மீன்பிடி அமைச்சரை கேட்டுக் கொள்கிறோம் - என்றார்.

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# மேல் மாகாணத்தில் 30 வயதுக்கும் மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி

## சுகாதாரத்துறைக்கு ஜனாதிபதி பணிப்பு

*கொழும்பு, ஜூலை 03*

மேல் மாகாணத்தில், 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இம்மாத இறுதிக்குள் கொரோனாத் தடுப்பூசிகளைச் செலுத்துமாறு சுகாதாரத்துறைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

தடுப்பூசி திட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கொரோனாக் கட்டுப்பாட்டுப் பணிக்குழுவுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போது ஜனாதிபதி இதனைக் கூறினார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொள்வனவுக்கான கட்டளைகள் முழுமைப்படுத்தப்பட்டிருக்கும் தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றதும், முறையான திட்டத்தின் கீழ், செப்ரெம்பர் மாதத்துக்கு முன் நாட்டின் அனைத்து மாகாணங்களுக்கும் அதிக சதவீதத்தில் தடுப்பூசிகளை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

இரண்டாம் டோஸூக்குத் தேவையான அஸ்ட்ரா செனகா தடுப்பூசிகள் விரைவில் கிடைக்கும் என்றும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்தவகையில், அஸ்ட்ரா செனகா தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டுள்ள அனைவருக்கும் அதன் இரண்டாவது டோஸை முறையாக வழங்குவதற்குத் திட்டமிடுமாறும் ஜனாதிபதி, சுகாதார அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடக பிரிவு குறிப்பிட்டுள்ளது. (இ)

# சேருவில பிரதேச சபை ஆட்சியை கைப்பற்றியது ‘தாமரை மொட்டு’

*திருகோணமலை, ஜூலை 03*

திருகோணமலை மாவட்டத்தின் ஐக்கிய தேசியக் கட்சியின் கீழிருந்த சேருவில பிரதேச சபையின் அதிகாரத்தை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கைப்பற்றியது.

கடந்த 7 மாதங்களாக இயங்காத நிலையிலிருந்த இந்தச் சபைக்கு, நீதிமன்ற உத்தரவுக்கு அமைய, புதிய தவிசாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான பிரேரணை நேற்று முன்வைக்கப்பட்டு, வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது சபையின் புதிய தவிசாளராக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர் டப்ளியூ.ஏ.ஜயசிறி, 3 மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். இதனூடாக, இந்தச் சபையின் அதிகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சி இழந்தது.

மொத்தம் 15 உறுப்பினர்களைத் கொண்ட இந்தச் சபையில் ஐக்கிய தேசியக் கட்சி 6 உறுப்பினர்களையும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி 4 உறுப்பினர்களையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 3 உறுப்பினர்களையும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியன தலா ஓர் உறுப்பினரையும் கொண்டிருந்தன.

நேற்றைய வாக்கெடுப்பின்போது, புதிய தவிசாளருக்கு ஆதரவாக 9 வாக்குகளும், எதிராக 6 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருவரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த ஒருவரும் ஆதரவாக வாக்களித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும் எதிராக வாக்களித்தனர். (இ)

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உட்பட

# சகல சிறு கட்சிகளையும் இணைத்தே தேர்தல் சீர்த்திருத்தம் அணுகப்படும்

## மனோ எம்.பி. தெரிவிப்பு



*கொழும்பு, ஜூலை 03*

“தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் கூட்டுச் செயற்பாட்டில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உட்பட உடன்படும் அனைத்து சிறு கட்சிகளும் இணைத்துக் கொள்ளப்படும். எவரையும் தவிர்த்து விட்டுப் பயணிக்கும் எந்தவித தேவை யும் கிடையாது.”

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

“ஜே.வி.பி. தலைமையகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சந்திப்பு அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டமையால், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உட்பட ஏனைய கட்சிகள் அழைக்கப்பட வில்லை. மேலும், இன்றைய விகிதா சார முறைமை தொடர்ந்து பேணப் படுவதை, பொது நன்மை கருத்தை தாமும் ஆதரிப்பதாக ஐக்கிய மக் கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேம தாஸ எம்.பியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும் உறுதியளித்துள்ளனர்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிறு கட்சிகளின் தேர்தல் சீர்திருத்த பேச்சில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஏன் அழைக்கப்படவில்லை என்ற சர்ச்சை தொடர்பில் கருத்துக் கூறிய மனோ எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

“தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் இன ரீதியான சிறு கட்சிகளும், அரசியல் ரீதியான சிறு கட்சிகளும் தேர்தல் சீர்திருத்தம் என்ற பொதுப் பிரச்சினையைக் கூட்டாகவே எதிர்கொள்ள வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

இந்தப் பிரச்சினை தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் நண்பர் அநுரகுமார திஸநாயக்க எம்.பியுடன் பேசுகின்ற அதேவேளை, நானும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பியும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ எம்.பியுடனும் இது தொடர்பில் பேசியுள்ளோம்.

இன்றைய விகிதாசார முறைமையே எமது பொது நிலைப்பாடு என நாம் அவருக்குக் கூறிய போது, சஜித் பிரேமதாஸ எம்.பி., தான் இன்றைய விகிதாசார முறைமைக்கு முழு ஆதரவு தருவதாக எமக்கு உறுதியளித்துள்ளார். இது தொடர்பாக தமது கட்சி பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பியை அழைத்து அறிவுறுத்தல் வழங்கினார்.

அதேபோல், தேர்தல் சீர்திருத்த பேச்சு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களுடனும் நான் நேரடியாகப் பல முறை பேசியுள்ளேன். வடக்கு மாகாணத்தில் புதிய கலப்பு முறைமை தமக்குச் சாதகமாக அமையக்கூடிய வாய்ப்புகள் இருந்தாலும், நாடு முழுக்க சிதறி வாழும், தமிழ், முஸ்லிம் மக்களின் நன்மை கருதி தாமும் இன்றைய விகிதாசார முறைமை தொடர்ந்து பேணப்படுவதை ஆதரிக்கத் தயார் என கூட்டமைப்பு பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. என்னிடம் உறுதியளித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய தலைவர்களும் இத்தகைய நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர் என்று நான் அறிந்துள்ளேன்” - என்றார். (இ)

**வேலையாட்கள் தேவை**

யாழ் கொக்குவிலில் புதிதாக ஆரம்பிக்க உள்ள பல்பொருள் வாணிபத்திற்கு

1. போட்டோகொப்பி அடிக்கத் தெரிந்த தமிழ் ஆங்கில Typing தெரிந்தவர்கள்.
2. A/L வர்த்தகத்தில் சித்தியடைந்த பெண் ஊழியர்களும் தேவை.
3. Graphical Designing தெரிந்தவர்கள்
   ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
   முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 076 855 4077**







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி- பண்டிதர் திருநாவுக்கரசு
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - மறு ஒளிபரப்பு

பகல்

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- பஞ்சதந்திரம்
04.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை-ஜனாதிபதி பொது மன்னிப்பில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ததில் தமிழ் அரசியல்வாதிகளின் நிலைப்பாடு பாகம்-02




7.00 மணி : ICTA ன் திறன் அபிவிருத்தி பணிப்பாளர் சமீர ஜெயவர்தன கலந்து கொள்ளும் விசேட நேர்காணல்




7.30 மணி : சுப்பர் குறுாப்-இசை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்
10.00 மணி : நெற்றிக்கண்-கிளிநொச்சி கௌதாரிமுனைப் பகுதியில் கடலட்டை வளர்ப்பு எனும் பெயரில் நடப்பது என்ன?




## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் டிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமரலை)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
07.00 மணி : அன்ரியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு